# திவ்ய ஜீவ ஒளி





அமரர்

## திருமதி. திவ்யா சுதாகரன்

(B Com, CIMA, CPA, Tax Consultant at H&R Block (Aus), Ex. Asst. Manager - BOC)

01-07-2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்? எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு?

எதை நீ படைத்திருந்தாய், அது வீணாகுவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.

" இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும் "

- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -

OSAI Digital
for all your designing & printing needs
473,1/1A, Galle Road, Colombo 00600 | +94 77 5433356 | osaidigital@gmail.com | www.osaidigital.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



வடகோவையம்பதியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு மற்றும்
அவுஸ்ரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# திருமதி திவ்யா சுதாகரன்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# திவ்ய ஜீவ ஒளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எமது குடும்பத்தில் தோன்றி
எம் எல்லோருடனும் பாசமுடன் பழகி
துணைவர்க்கு நல்ல துணைவியாய்
பிஞ்சுப்பிள்ளைகளிற்கு வஞ்சகம் அற்ற தாயாகி
எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி
இறைவனடி சேர்ந்த
**அமரர் திருமதி திவ்யா சுதாகரன்**
அவர்களின் தூய நல் ஆத்மா அருள்மிகு
வடகோவை ஸ்ரீ சித்திரவேலாயுதப் பெருமான்
திருவடிகளில் நித்திய ஆத்மசாந்தி
பெறவேண்டுமென பிரார்த்தித்து அவர்தம்
பாதங்களில் கண்ணீர் நிறைந்த விழிகளுடன்
இம்மலரை சமர்ப்பணம் செய்கிறோம்.

**- குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## என்றும் எம் நினைவுகளில்

தோற்றம்

16 – 06 – 1979

மறைவு

18 – 05 – 2018




# திருமதி. திவ்யா சுதாகரன்

(B Com, CIMA, CPA, Tax Consultant at H&R Block (Aus), Ex. Asst. Manager - BOC)

## திதி வெண்பா

கலியுகத்து விளம்பியாண் டினில்சேரும் வைகாசியில்
பொலிவுபெறு வளர்பிறைசேர் சதுர்த்தியதே - வலிவுபெறு
நிலவுமுகத் " திவ்யா " எனும் அணங்கவளே அவனிவிட்டு
நிலவணிந்தோன் பதஞ்சேர்ந்த திதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராண தோத்திரங்கள்



## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன் நாமங்கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண்ட லத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண் டக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மன மணிவிளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்
திருவீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்டுள்ளம்
குளிர என் கண் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற் றேன்பெற்ற
தார்பெறு வார்உலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு
    வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
    பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
    வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன்
    அடியின்கீழ் இருக்க என்றார்

# திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தம தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

# வாழ்த்து

வான்முகில் வளாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாத வாரப் பதிகம்

### காப்பு

வேதராகத்தில் விளங்கும் விமலை விழைந்து தூக்கும்
பாதர் ஆகத்தில் கலந்தாள் பவானி பராபரைக்கு
மாத வாரத்துப் பதிகம் விளம்ப வரந்தருவாய்
நாத யோகத்தின் அனுபவமாய் கண நாயகனே.

### சித்திரை

முத்தமிழ்போல் முக்கடல்சூழ் குமரிமுனை வளரும்
உத்தமியே ஸ்ரீ சக்கரந்தனில் உதித்தவளே
எத்தருணத்திலும் எனைப்பிரியாமல் எனக்கிரங்கிச்
சித்திரைத் திங்களில் வந்தருள் செய்வாய்

### வைகாசி

கைகால் நுடங்கியும் கண்பஞ்சடைத்தும் ஈகாகம் கொத்தி
மெய்தான் அழுகியும் மாள்வோரைக் கண்டு மிகவும் நொந்தேன்
உய்கேனோ ஓவென்று உழலுகின்றேன் நீ உளமிரங்கி
வைகாசி எல்லாம் வருவாய் மதுரை மனோன்மணியே

### ஆனி

ஊனில் உளத்தில் உணர்வில் உயிரில் உயிர்க்குயிராய்
வானில் மொழியில் கலந்து நின்றாலும் மலர்க் கொடியே
ஞானிகள் தேடும் பரஞ்சுடரே உன்னைநான் பணிந்தேன்
ஆனி மாதத்தில் அருள்புரிவாய் ஜகதாம்பிகையே.

### ஆடி

வாடி வருந்தும் மனம் தண்மையாக மழைபொழிவாய்
கோடி மார்த்தாண்ட சமசோதி வீசும் குளிர்நிலவே
பாடிவந்தேன் இன்னும் பாடுகின்றேன் எங்கள் பாக்கியத்தால்
ஆடியில் ஆடிவருவாய் சிவன் கொஞ்சும் அஞ்சுகமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆவணி

காவணியாவது கனிமலரால் கலைகாட்டுகின்ற
பாவணியாவது அநுபூதியால் அன்பு பற்றுகின்றோம்
நாவணியாவது நாமத்தினால் அன்றோ நாடும்எம்முன்
ஆவணித்திங்களில் வந்தருள்வாய் என்னை ஆண்டவனே

## புரட்டாதி

இருட்டாசையால் குழிவீழாமல் காமுவிரண்டு போய்கள்
வெருட்டாமல் காஎன்று வேண்டுகின்றேன் இந்த வீணணையும்
பொருட்டாக எண்ணி அருட்கோல் அளித்த நீ புன்னகைத்து
புரட்டாசித்திங்களில் வந்தருள்வாய் அன்னபூரணியே

## ஐப்பசி

மைப்படியம் கயற்கண்ணி மதுரை மரகத்தால்
கைப்படியா எழில்மான் என்று அரன் உனைக் கைபிடித்தான்
அப்படியே மணக்கோலங்கண்டு ஏழை அகம்மகிழ
ஐப்பசி மாதம் வருவாய் அடியேன் அடைக்கலமே

## கார்த்திகை

வார்த்தை குழறிட மெய்புளகிக்க மனம்உருகி
தீர்த்மாம் கண்ணீரில் நின்தாள் அலம்பித்தினம் தொழுதேன்
பார்த்தவை யாவும் நீ என்றுணரும் பரிபக்குவத்தால்
கார்திகைத் திங்கள் வருவாய் கருணைக் களஞ்சியமே.

## மார்கழி

சேர்சிறு காலை துயில்நீத் தெழுந்தருட் செல்வருடன்
நீர் துழைந்த்தாடி மலர்கொய்து சன்னிதி நின்று நின்றன்
பேர்பலபாடி வணங்குகின்றோம் எம்பிழை தவிர்க்க
மார்கழிமாதம் வருவாய் அம்மாஞான மாணிக்கமே

## தை

தைத்தும் சுறுத்தும் ஒறுக்கும் கசடரைக் கால்பணிந்து
பொய்த்துன்ப மேனியைப் போற்றுகின்றீர் இருள்போக உள்ளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தால் வரம் தருவான் எங்கள் தாய் என்றும் வாக்குரைத்தேன்
தைத்திங்கள் வந்தெண்ணம் ஈடேற்ற வேண்டும் தயாநிதியே.

### மாசி

காசியைக் கயிலையைக் கண்டும் கருத்திற் களங்கம் என்னும்
பாசியை நீக்கார் பயன்பெறுவாரோ பரிந்து நன்மை
பேசி அன்புப் பணிசெய்வார் பெரியோர் மெய்ப்பேறளிக்க
மாசியில் ஆசி தருவாய் மாசில்லாத மாணிக்கமே.

### பங்குனி

எங்கும் நின் கண்ணுண்டெதையும் நீகேட்பாய் எலாமுனக்குள்
தங்கும் நீயே தேவாதேவாதி கட்கும் தலைவி அன்பால்
பொங்கும் மனத்தே முளைத்துத் தழைக்கின்ற பொற்கொடி நீ
பங்குனித் திங்களில் வந்தருள் செய்வாய் பராசக்தியே.

### ஞாயிறு

ஆயிரம் நாமத்தில் அர்ச்சனை செய்தேன் அடிபணிந்தேன்
தாயினும் அன்பு பொழிந்தென்னைத் தாங்கும் தமிழரசி
பேயும் பிணியும் வறுமையும் போக்கி விளங்கிடுவாய்
ஞாயிறு தோறும் வருவாய் சிவலோக நாயகியே.

### திங்கள்

சங்கப் புலவர் கவிக்கு ஒளியூட்டும் தனிப்பொருளே
இங்கிப் பணிக்கே என் அங்கத்தை இட்டேன் எனக்கிரங்கி
சிங்கக் குருளை வடிவேல் முருகனும் சேர்ந்திருக்க
திங்கட்கிழமை வருவாய் அருள்வாய் சிவசக்தியே.

### செவ்வாய்

பங்கஜபாதம் பணிந்தறியேன் பக்தர் பாடுகையில்
அங்கம் சிலிர்க்க அழுதறியேன் ஏழை ஆயினும் என்
சங்கடம் தீர்த்தருள்வாய் என்றுனையே சரண் புகுந்தேன்
மங்களவாரம் வருவாய் அம்மா ஜீவமாணிக்கமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதன்

மதமாயைச் சேற்றில் உழன்றேன் சிவாமுதவாரிதியை
இதமாகக் காட்டி நீராட்டி உள்ளத்தின் இழுக்ககற்றிப்
பதமான யோக சம்பத்தெல்லாந் தந்தென்னைப் பாடவைத்தாய்
புதவாரந் தோன்றி அருள்புரிவாய் தெய்வப் பூங்குயிலே.

## வியாழன்

ஒருவாய் அமுதை முருகனுக்கு ஊட்டி மற்றொன்றை முன்னோன்
பெருவாயில் ஊட்டி மகிழ்கின்றபோது பிதிரும் அன்னம்
தருவாய் எனக்காத்து நிற்கும் இவ்வேளை தவப்பயன் போல்
குருவாரம் தன்னில் வருவாய் சிவலோக கோகிலமே.

## வெள்ளி

துள்ளித்திரியும் மனம் உள்ளடங்க நின்தோத்திரங்கள்
அள்ளிக் குடித்தேன் உடலம் கூத்தாட அக்கதவை
மெல்லத் திறந்து தெளிந்து குளிர்ந்து விளக்கேற்றினேன்
வெள்ளிக்கிழமையில் வந்தருள்வாய் ஞான வித்தகியே

## சனி

மனக்கவலைக்கு இங்கிடமில்லை தாழ்வில்லை வாட்டமில்லை
இனிக்கிரகங்கள் கொடும்பார்வை இல்லை இடருமில்லை
எனக்கும் இரங்கி என்பாடலை ஏற்றாய் பேரின்பம் ஈந்தாய்
சனிக்கிழமை கண்வருவாய் வசங்கரி சங்கரியே.

## பயன்

திங்கள் ஈராறும் தினங்கள் ஓரேழும் திருப்பெயரை
எங்கிருந்தாலும் புகழ்வேன் நான் செல்லும் இடங்கள் எல்லாம்
மங்களம் பொங்கி மரபோங்கி வாழ வரம் தருவாய்
நங்கை சிவகாமி அம்மா அகிலாண்ட நாயகியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயக அஷ்டோத்தர

# சதநாம பூஜை

ஓம் கஜானனாய நம:
ஓம் கணாத்யக்ஷாய நம:
ஓம் விக்னராஜாய நம:
ஓம் வினாயகாய நம:
ஓம் த்வை மாதுராய நம:
ஓம் த்விமுகாய நம:
ஓம் ப்ரமுகாய நம:
ஓம் ஸுமுகாய நம:
ஓம் க்ருதினே நம:
ஓம் சுப்ர தீபாய நம: (10)

ஓம் ஸுகநிதயே நம:
ஓம் ஸுராத் யக்ஷாய நம:
ஓம் ஸுரா ரிக்னாய நம:
ஓம் மஹா கணபதயே நம:
ஓம் மான்யாய நம:
ஓம் பஹ்மஜாய நம:
ஓம் புராண புருஷாய நம:
ஓம் பூஷ்ணே நம:
ஓம் புஷ்கரோதக்ஷத சாரினே நம:
ஓம் அக்ரகண்யாய நம: (20)

ஓம் அக்ரபூஜ்யாய நம:
ஓம் அக்ரகாமினே நம:
ஓம் மம்த்ரக்ருதே நம:
ஓம் சாமீகர ப்ரபாய நம:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸர்வஸ்மை நம:
ஓம் ஸர்வோபாஸ்யாய நம:
ஓம் ஸர்வ கர்த்ரே நம:
ஓம் ஸர்வ நேத்தரே நம:
ஓம் ஸர்வஸித்தி ப்ரதாய நம:
ஓம் ஸர்வ ஸித்தயே நம: (30)

ஓம் மஹா காலாய நம:
ஓம் மஹா பலாய நம:
ஓம் ஹேரம்பாய நம:
ஓம் லம்ப ஜடராய நம:
ஓம் ஹ்ரஸ்வ க்ரீவாய நம:
ஓம் மஹோதராய நம:
ஓம் மதோத் கடாய நம:
ஓம் மஹா வீராய நம:
ஓம் மந்த்ரிணே நம:
ஓம் மங்கள ஸ்வராய நம: (40)

ஓம் ப்ரமதாய நம:
ஓம் ப்ராக்ஞாய நம:
ஓம் மோதகப் பிரியாய நம:
ஓம் காந்திமதே நம:
ஓம் க்ருதிமதே நம:
ஓம் கானே நம:
ஓம் கபித்த மனஸ்பிரியாயை நம:
ஓம் ப்ரம்ஹசாரிணே நம:
ஓம் ப்ரஹ்மரூபிணே நம: (50)

ஓம் ப்ரஹ்ம வித்யா நிதான புவே நம:
ஓம் ஜிஸ்ணவே நம:
ஓம் விஷ்ணுப்பிரியாய நம:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் பக்த ஜீவிதாய நம:
ஓம் ஜிதமன்மதாய நம:
ஓம் ஐஸ்வர காரணாய நம:
ஓம் ஜ்யாயஜே நம:
ஓம் யக்ஷ கின்னரஜேவிதாய நம:
ஓம் கங்கா ஸுதாய நம:
ஓம் விக்னகர்த்தரே நம: (60)

ஓம் விக்ன ஹந்த்ரே நம:
ஓம் விஸ்வ நேத்ரே நம:
ஓம் விராட்பதேய நம:
ஓம் மங்கள கணேசா நம:
ஓம் ஸ்ரீபதேய நம:
ஓம் வாக்பதேய நம:
ஓம் ச்ருங்காரிணே நம:
ஓம் ஆச்ரிதவத்ஸலாய நம:
ஓம் சிவப்ரியாய நம:
ஓம் சீக்ரகாரிணே நம: (70)

ஓம் சாஸ்வதாய நம:
ஓம் ஓம் பலாய நம:
ஓம் பலோத்ததாய நம:
ஓம் பக்த நிதயே நம:
ஓம் பாவகம்யாய நம:
ஓம் மங்களப்ரதாய நம:
ஓம் அவ்யக்தாய நம:
ஓம் அபாக்குதபராக்ரவாய நம:
ஓம் ஸத்யதர்மிணே நம:
ஓம் ஸத்யை நம: (80)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸரஸாம்புநிதியே நம:
ஓம் பாஹேசாய நம:
ஓம் தேசாங்காய நம:
ஓம் மணி கிண்கிணிமேகலாய நம:
ஓம் சமஸ்ததேவதா முர்த்தயே நம:
ஓம் ஸஜிஸ்ணவே நம:
ஓம் ஸததோத்திதாயை நம:
ஓம் விகாதகாரிணே நம:
ஓம் விஸ்வக்ருமே நம:
ஓம் விஸ்வரக்ஷாக்ருதயே நம: (90)

ஓம் பஞ்சஹஸ்தாய நம:
ஓம் பார்வதி நந்தனாய நம:
ஓம் ப்ரபவே நம:
ஓம் குமாரகுரவே நம:
ஓம் குஞ்ஜராஸுர பஞ்ஜனாய நம:
ஓம் காணாதீசாய நம:
ஓம் கம்பீர நின தாய நம:
ஓம் வடவே நம:
ஓம் அபீஷ்டவரதாய நம:
ஓம் ஜ்யோதிஷே நம: (100)

ஓம் ஆக்ராந்தசதஸதத் பிரபவே நம:
ஓம் கல்யாணருரவே நம:
ஓம் உன்மத்தவேஷாய நம:
ஓம் வரஜிதே நம:
ஓம் சமஸ்த ஜகதா தாராய நம:
ஓம் ஸர்வைர்யப்ரதாய நம:
ஓம் ஸ்ரீ விக்நேஸ்வராய நம:
ஓம் ஸ்ரீ மகாகணபதியே நம: (108)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காரியசித்திமாலை

பந்தம் அகற்றும் அநந்தகுணப்
பரப்பும் எவன் பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில்
ஈண்டி இருந்து காக்குமோ
சந்த மறை ஆகமங்கலைகள் அனைத்தும்
எவன்பால் தகவருமோ
அந்த இறையாம் கணபதியை
அன்பு கூரத் தொழுகின்றோம்.

உலகம் முழுதும் நீக்கமற
ஒன்றாய் நிற்கும் பொருளெவனவ்
உலகிற் பிறக்கும் விகாரங்கள்
உறாத மேலாம் ஒளியாவான்
உலகம் புரியும் வினைப் பயனை
ஊட்டுங் களைக்கண் எவன் அந்த
உலக முதலாங் கணபதியை
உவந்து சரணம் அடைகின்றோம்.

இடர்கள் முழுவதும் எவனருளால்
எரிவீ ழும்பஞ் செனமாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
சுடர்வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க் கூறின்றிக்
கருமம் எவனால் முடிவுறும் அத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடவு மருப்புக் கணபதிபொன்
சரணம் சரணம் அடைகின்றோம்.
மூர்த்தி யாகித் தலமாகி
முந்நீர் கங்கை முதலான
தீர்த்த மாகி அறிந்தறியாத்
திறத்தி னாலும் உயிர்க்குநலம்
ஆர்த்தி நாளும் அறியாமை
அகற்றி அறிவிப்பான் எவன் அப்
போர்த்த கருணைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.

செய்யும் வினையின் முதல்யாவன்
செய்யப் படும்அப் பொருள்யாவன்
ஐயம் இன்றி உளதாகும்
அந்தக் கருமப் பயன் யாவன்
உய்யும் வினையின் பயன்விளைவில்
ஊட்டி விடுப்பான் எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப்
புரிந்து சரணம் அடைகின்றோம்.

வேதம் அளந்தும் அறிவரிய
விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடம் நவிலும்
விமலன் யாவன் விளங்குபர
நாத முடிவில் வீற்றிருக்கும்
நாதன் எவன்எண் குணன் எவன் அப்
போத முதலைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.

மண்ணின் ஓர்ஐங் குணமாகி
வதிவான் எவன்நீர் இடைநான்காய்
நண்ணி அமர்வான் எவன்தீயின்
மூன்றாய் நவில்வான் எவன் வளியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணும் இரண்டும் குணமாகி
இயைவான் எவன்வான் இடைஒன்றாம்
அண்ணல் எவன் அக்கணபதியை
அன்பிற் சரணம் அடைகின்றோம்.

பாச அறிவில் பசு அறிவில்
பற்றற் கரிய பரன்யாவன்
பாச அறிவில் பசு அறிவும்
பயிலப் பணிக்கும் அவன் யாவன
பாச அறிவும் பசு அறிவும்
பற்றி மேலாம் அறிவான
தேசன் எவன் அக்கணபதியைத்
திகழச் சரணம் அடைகின்றோம்.

நூற்பயன்

இந்த நமது தோத்திரத்தை யாவன் மூன்று தினம் மும்மைச்
சந்தி களில்தோத் திரஞ்செயினும் சகல கரும சித்திபெறும்
சிந்தை மகிழச் சுபம்பெறும்எண் தினம் உச் சரிக்கின் சதுர்த்தியிடைப்
பந்தம் அகல ஓர்எண்கால் படிக்கில் அட்ட சித்தியுறும்.

திங்கள் இரண்டு தினந்தோறும்
திகழ ஒருபான் முறையோதில்
தங்கும் அரச வசியமாம்
தயங்க இருபத்தொரு முறைமை
பொங்கும் உழுவ லால்கிளப்பின்
பொருவின் மைந்தர் விழுக்கல்வி
தூங்க வெறுக்கை முதற்பலவும்
தோன்றும் எனச்செப் பினர் மறைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விநாயக கவசம்

வளர்சிகையைப் பராபரமாய் வயங்கு
விநாயகர் காக்க வாய்ந்த சென்னி
அளவுபடா அதிகசவுந் தரதேக
மகோற்கடர்தாம் அமர்ந்து காக்க
விளரறநெற் றியை என்றும் விளங்கிய
காசிபர்காக்க புருவந் தம்மைத்
தளர்வில் மாகோ தரர்காக்க
தடவிழிகள் பாலசந் திரனார் காக்க !!

கவின்வளரும் அதரம் கசமுகர் காக்க
காலங்கணக் கிரீடர் காக்க
நவில்சிபுகம் கிரிசைகார் காக்க
நனிவாக்கைவிநா யகபுதாம் காக்க
அவிர்நகை மின் முகர் காக்க
அள் எழிற் செஞ் செவிபாச பாணி காக்க
தவிர்தலுரு திளங் கொடிபோல் வளர்மணி
நாசியைச் சிந்தி தார்த்தர் காக்க !!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமருபூ முகந்தன்னைக் குணேசர்
நனி காக்ககளக் கணேசர் காக்க
வாமமுறும் இருதோளும் வயங்குகந்த
பூர்வசர் தாம்மகிழ்ந்து காக்க
ஏமமுறு மணிமுலை விக்கின விநாசன் காக்க
இதயந் தன்னைத் தோமகலுங் கணநாதர் காக்க
அகட்டினைத் துலங்கே ரம்பர் காக்க !!

பக்கங்கள், தொண்டை காக்க:
பக்கம் இரண் டையுந்தரா தரர்காக்க
பிருட்டத்தைப் பாவம் நீக்கும்
விக்கினகரன் காக்க விளங்கிலிங்கம்
வியாளபூ டணர்தாம் காக்க
தக்ககுய்யந் தன்னைவக் கிரதுண்டர் காக்க
சகனத்தை அல்லல் உக்கண பன் காக்க
ஊருவை மங் களமூர்த்தி உவந்து காக்க

தாள்முழந்தாள் மகாபுத்தி காக்க
இரு பதம்ஏக தந்தர் காக்க
வாழ்கரம் க்ஷிப்பிரப் பிரசாதனர் காக்க
முன்கையை வணங்கு வார்நோய்
ஆழ்தரச்செய் ஆசாபூரகர் காக்க
விரல்பதும அத்தர் காக்க
கேழ்கிளரும் நகங்கள்விநா யகர் காக்க
கிழக்கினிற் புத்தீசர் காக்க !!

திக்குகள் அனைத்திலிருந்தும் காக்க:
அக்னியில் சித்தீசர் காக்க
உமா புத்திரர்தென் திசைகாக்க
மிக்கநிரு தியிற்கணே சுரர் காக்க
விக்கினவர்த்தனர்மேற் கென்னுந்
திக்கதனிற் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயுவிற் கசகர் ணன்காக்க
திகழ்உதீசி தக்கநிதி பன்காக்க
வடகிழக்கில் ஈசநந் தனரே காக்க !!

ஏகதந்தர் பகர்முழுதும் காக்க
இர வினும்சுந்தி இரண்டன் மாட்டும்
சையின் விக் கினகிருது காக்க
இராக் கதர்பூதம் உருவேதாளம்
மோகினிபேய் இவையாதி உயிர்திரத்தால்
வருந்துயரம் முடிவிலாத
வேகமுறு பிணிபலவும் விலக்குபு
பாசாங்குசர்தாம் விரைந்துகாக்க !!

மதிஞானம் தவந்தரன ம்மானம் ஒளி
புகழ்குலம் வண்சசரீரம் முற்றும்
பதிவான தனம்தானியம் கிருதம்
மனைவி மைந்தர் பயில்நட் பாதிக்
கதியாவும் கலந்து சர்வா யுதர்காக்க
காமர்பவுத் திரர் முன் னான
விதியாரும் சுற்றமெல்லாம் மயூரேசர்
எஞ்ஞான்றும் விரும்பிக் காக்க !!

படிப்போர் நோயற்றவராய் வாழ்வார்:
வென்றி சீவிதம் கபிலர் காக்க
கரி யாதியெல்லாம் விகடர் காக்க
என்றிவ்வா றிதுதனை முக்காலமும்
ஓதிடினும் பால் இடையூறொன்றும்
ஒன்றுறா முனிவரவர்காள் அறிமின்கள்
யாரொருவர் ஓதினாலும்
மன்ற ஆங் கவர்தேகம் பிணியற வச்
சிரதேக மாகி மன்னும் !!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடராசர் துதி

திருவடி ஞானம் சிவமாக்கு விக்கும்
திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிறைமல மீட்கும்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே.

தானந்தம் இல்லாச் சதானந்த சக்திமேல்
தேனுந்தும் ஆனந்த மாநடங் கண்டீர்
ஞானங் கடந்துநடஞ் செய்யும் நம்பிக்கங்
கானந்தக் கூத்தாட ஆடரங் கானதே.

ஆனந்தம் ஆடரங் கானந்தம் பாடல்கள்
ஆனந்தம் பல்லியம் ஆனந்த வாச்சியம்
ஆனந்த மகா அகில சராசரம்
ஆனந்தம் ஆனந்தக் கூத்துகந்தானுக்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியான சுலோகம்

ஓம் வந்தே சம்புமுபாதிம் ஸுரகுரும்
வந்தே ஜகத்காரணம்
வந்தே பந்நகபூஷணம் ம்ருகதரம்
வந்தேபசுநாம் பதிம்
வந்தே ஸுர்ய சகாங்கவஹ்நி நயனம்
வந்தே முகுந்தப்ரியம்
வந்தே பக்தஜநாச்ரயஞ்ச வரதம்
வந்தே சிவம் சங்கரம்

''வான நாடுடை '' மைந்தனே''
ஓ என்பன்வந்தரு ளாய் என்பன்:
பால்நெய் ஐதுடன் ஆடிய
படர்சடைப் பால்வண்ண னே! என்பன்:
தேன்மர்பொழில் சூழ்தரு
தில்லையுள் திருநடம் புரிகின்ற
ஏன மாமணிப் பூஷணி
மார்பனே! எனக்கருள் புரியாயே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோடஷ நாமாவளி

ஓம் சிவாய நம:
ஓம் பசுபதயே நம:
ஓம் மஹஸ்வராய நம:
ஓம் விருபாக்ஷாய நம:
ஓம் ப்ரமதாதிபாய நம:
ஓம் சம்பவே நம:
ஓம் சங்கராய நம:
ஓம் சமஸ்தி வித்யா நகரீ நாயகயா நம:
ஓம் ருத்திராய நம:
ஓம் நீலகண்டாய நம:
ஓம் ஹ்ரிகேஸாய நம:
ஓம் கபர்திநே நம:
ஓம் ஹராய நம:
ஓம் பிநாகிநே நம:
ஓம் சந்த்ரசேகராய நம:
ஓம் ஸதாசிவாய நம:

ஸ்ரீ உமா மஹேஸ்வராய நம:
நானாவித பரிமள பத்ர புஷ்பாணி சமர்ப்பயாமி!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூலமந்திரம் (ஜப மந்திரம்)

ஓம் ஹ்ரீம் சிவாய நம:

# காயத்ரீ மந்திரம்

ஓம் தத்புருஷாய வித்மஹே
மஹாதேவாய தீமஹி
தந்நோ ருத்ர: ப்ரசோதயாத்



# சிவபெருமான் வழிபாடு

**(108 போற்றி அப்பரடிகள் அருள்வாக்கு)**

| | |
|---|---|
| கற்றவர்கள் உண்ணும் கனியே | போற்றி |
| கழல் அடைந்தார் செல்லும் கதியே | போற்றி |
| அற்றவர்கட்கு ஆரமுதம் ஆனாய் | போற்றி |
| அல்லல் அறுத்து அடியேனை ஆண்டாய் | போற்றி |
| மற்று ஒருவர் ஒப்பில்லா மைந்தா | போற்றி |
| வானவர்கள் போற்றும் மருந்தே | போற்றி |
| செற்றவர் தம் புரம் எரித்த சிவனே | போற்றி |
| திருமூலட்டானனே போற்றி | போற்றி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கமலி கடல் நஞ்சம் உண்டாய் போற்றி
மதயானை ஈர் உருவை போர்த்தாய் போற்றி
கொங்கலரும் நறுங்கொன்றைத் தாராய் போற்றி
கொல்புலித் தோல் ஆடைக் குழகா போற்றி
அங்கணனே அமரர்கள் தம் இறைவா போற்றி
ஆலமரம் நீழல் அறம் சொன்னாய் போற்றி
செங்கனகத் தனிக்குன்றே சிவனே போற்றி
திருமூலட்டானனே போற்றி போற்றி

மலையான் மடந்தை மணாளா போற்றி
மழவிடையாய் நின்பாதம் போற்றி போற்றி
நிலையாக என் நெஞ்சில் நின்றாய் போற்றி
நெற்றி மேல் ஒற்றைக் கண் உடையாய் போற்றி
இலை ஆர்ந்த மூவிலைவேல் ஏந்தி போற்றி
ஏழ் கடலும் ஏழ்பொழிலும் ஆனாய் போற்றி
சிலையால் அன்று எயில் எரித்த சிவனே போற்றி
திருமூலட்டானனே போற்றி போற்றி

பொன்னியலும் மேனியனே போற்றி போற்றி
பூதப்படை உடையாய் போற்றி போற்றி
மன்னிய சீர் மறை நான்கும் ஆனாய் போற்றி
மறியேந்து கையானே போற்றி போற்றி
உன்னும் அவர்க்கு உண்மையனே போற்றி போற்றி
உலகுக்கு ஒருவனே போற்றி போற்றி
சன்னிமிசை வெண்பிறையாய் போற்றி போற்றி
திருமூலட்டானனே போற்றி போற்றி

நஞ்சுடைய கண்டனே போற்றி போற்றி
நற்றவனே நின் பாதம் போற்றி போற்றி
வெஞ்சுடரோன் பல் இறுத்த வேந்தே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்மதியம் கண்ணி விகிர்தா போற்றி
துஞ்சிருள் ஆடல் உகந்தாய் போற்றி
தூநீறு மெய்க்கணிந்த சோதீ போற்றி
செஞ்சடையாய் நின்பாதம் போற்றி போற்றி
திரு மூலட்டானனே போற்றி போற்றி

சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி
அங்கமலத்து அயனோடு மாலும் காணா
அனல் உருவா நின் பாதம் போற்றி போற்றி
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திரு மூலட்டானனே போற்றி போற்றி

வம்புலவு கொன்றைச் சடையாய் போற்றி
வான் பிறையும் வாளரவும் வைத்தாய் போற்றி
கொம்பனைய நுண்ணிடையாள் கூறா போற்றி
குரைகழலால் கூற்று உதைத்த கோவே போற்றி
நம்பும் அவர்க்கு அரும்பொருளே போற்றி போற்றி
நால்வேதம் ஆறங்கம் ஆனாய் போற்றி
செம்பொனே மரகதமே மணியே போற்றி
திரு மூலட்டானனே போற்றி போற்றி

உள்ளமாய் உள்ளத்தே நின்றாய் போற்றி
உகப்பார் மனத்தென்றும் நீங்காய் போற்றி
வள்ளலே போற்றி மணாளா போற்றி
வானவர்கோன் தோள் துணித்த மைந்தா போற்றி
வெள்ளை ஏறு ஏறும் விகிர்தா போற்றி
மேலோர்க்கும் மேலோர்க்கும் மேலாய் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெள்ளு நீர்க்கங்கைச் சடையாய் போற்றி
திரு மூலட்டானனே போற்றி போற்றி
பூவார்ந்த சென்னிப் புனிதா போற்றி
புத்தேளிர் போற்றும் பொருளே போற்றி
தேவார்ந்த தேவர்க்கும் தேவே போற்றி
திருமாலுக்கு ஆழி அளித்தாய் போற்றி
சாவாமே காத்து என்னை ஆண்டாய் போற்றி

சங்கொத்த நீற்று எம் சதுரா போற்றி
சேவார்ந்த வெல்கொடியாய் போற்றி போற்றி
திருமூலட்டானனே போற்றி போற்றி
பிரமன் தன் சிரம் அரிந்த பெரியோய் போற்றி
பெண் உருவோடு ஆணுருவாய் நின்றாய் போற்றி
கரநான்கும் முக்கண்ணும் உடையாய் போற்றி
காதலிப்பார்க்கு ஆற்ற எளியாய் போற்றி
அருமந்த தேவர்க்கு அரசே போற்றி
அன்று அரக்கன் ஐந்நான்கு தோளும் தாளும்
சிரம் நெரித்த சேவடியாய் போற்றி போற்றி
திருமூலட்டானனே போற்றி போற்றி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீகணேச பஞ்சரத்னம்

முதா கராத்த மோதகம் சதா விமுக்தி சாதகம்
கலாதரா வதம்சகம் விலாசிலோக ரக்ஷகம்
அநாயகைக நாயகம் வினாஸிதேப தைத்யகம்
நதா சுபாஸு நாசகம் நமாமி தம் விநாயகம். 01

நதே தராதி பீகரம் நவோதி தார்க பாஸ்வரம்
நமத் ஸுராரி நிர்ஜனம் நதாதி காப துத்தரம்
ஸுரேஷ்வரம் நிதீஸ்வரம் கஜேஸ்வரம் கணேச்வரம்
மஹேஸ்வரம் சமாச்ரயே பராத்பரம் நிரந்தரம். 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸமஸ்த லோக ஸம்கரம் நிரஸ்த தைத்ய குஞரம்
தரேதரோதரம் வரம் வரே பவக்த்ர மஷ்கரம்
க்ருபாகரம் க்ஷமாகரம் முதாகரம் யசஸ்கரம்
மனஸ்கரம் நமஸ்க்ருதாம் நமஸ்கரோமி பாஸ்வரம். 03

அகிஞ்சனார்தி மார்ஜனம் சிரந்தனோக்தி பாஜனம்
புராரி பூர்வ நந்தனம் சுராரி கர்வ சர்வனம்
ப்ரபஞ்ச நாச பீஷனம் தனஞ்சயாதி பூஷனம்
கபோல தான வாரணம் பஜே புராண வாரணம். 04

நிதாந்த காந்த தந்த காந்தி மந்த காந்த காத்மஜம்
அசிந்த்ய ரூப மந்தஹீன மந்தராய க்ரிந்தனம்
ஹ்ருதந்தரே நிரந்தரம் வசந்தமேவ யோகிநாம்
தமேக தந்த மேவதம் விசிந்தயாமி சந்த்தம். 05

மஹா கணேச பஞ்சரத்ன மாதரேந யோன்வகம்
ப்ரஜல்பாதி ப்ரபாதகே ஹ்ருதி ஸ்மரன் கணேச்வரம்
அரோகதாம் அதோஷதாம் ஸுசகிதீம் ஸுபுத்ரதாம்
ஸமாஹிதாயுர்ஷ்ட பூதி மபுபைதிர் ஸோசிராத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ லிங்காஷ்டகம்

ப்ரஹ்ம முராரி ஸுரார்ச்சித லிங்கம்
நிர்மல பாஷித சோபித லிங்கம்/
ஜன்மஜ துக்க விநாசக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்//

தேவ முனி ப்ரவார்ச்சித லிங்கம்
காம தஹன கருணாகர லிங்கம்/
ராவண தர்ப்ப விநாசக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்//

ஸர்வ ஸுகந்த ஸுலேபித லிங்கம்
புத்தி விவர்த்தன காரண லிங்கம்/
ஸித்த ஸுராஸுர வந்தித லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்//



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனக மஹாமணி பூஷித லிங்கம்
பணிபதி வேஷ்டித சோபித லிங்கம்/
தக்ஷ ஸுயஜ்ஞ விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்//

குங்கும சந்தன லேபித லிங்கம்
பங்கஜ ஹார ஸுசோபித லிங்கம்/
ஸஞ்சித பாப விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்//

தேவ கணார்ச்சித ஸேவித லிங்கம்
பாவையர் பக்தி பிரேவச லிங்கம்/
தினகர கோடி ப்ரபாகர லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்//

அஷ்ட தளோபரி வேஷ்டித லிங்கம்
ஸர்வ ஸமுத்பவ காரண லிங்கம்/
அஷ்ட தரித்ர விநாசித லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்//

ஸுரகுரு ஸுரவர பூஜித லிங்கம்
ஸுரவன புஷ்ப ஸதார்ச்சித லிங்கம்/
பரமபர பரமாத்மக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாதிவ லிங்கம்//



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ சக்தி நாம பூசை

| | | |
|---|---|---|
| ஓம் | மஹேச்வர்யை | நம: |
| ஓம் | ஜகதம்பாயை | நம: |
| ஓம் | சங்கர்யை | நம: |
| ஓம் | சிவாயை | நம: |
| ஓம் | அன்னபூர்ணாயை | நம: |
| ஓம் | அபயப்ரதாயை | நம: |
| ஓம் | தயாகர்யை | நம: |
| ஓம் | கல்யாண்யை | நம: |
| ஓம் | உமாதேவ்யை | நம: |
| ஓம் | அஜாயை | நம: |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஓம் | அசஷராயை | நம: |
| ஓம் | அபவர்கப்ரதாயை | நம: |
| ஓம் | த்ரிபுரகந்தர்யை | நம: |
| ஓம் | மஹாவித்யாயை | நம: |
| ஓம் | ராஜராஜேச்வர்யை | நம: |
| ஓம் | மஹாசக்தயை | நம: |
| ஓம் | ஸித்திருபாயை | நம: |
| ஓம் | காமேச்சர்யை | நம: |
| ஓம் | விஜயாயை | நம: |
| ஓம் | ப்ரபன்ன துக்க ஹாரிண்யை | நம: |
| ஓம் | பவான்யை | நம: |
| ஓம் | தமோநாசின்யை | நம: |
| ஓம் | ப்ரக்ருதிருபாயை | நம: |
| ஓம் | த்ரிகுணாயை | நம: |
| ஓம் | நாதரூபாயை | நம: |
| ஓம் | த்யானகம்யாயை | நம: |
| ஓம் | தஹராகாச ரூபிண்யை | நம: |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ சுப்பிரமணியர் நாம பூசை

| | | |
|---|---|---|
| ஓம் | குமாராய | நம: |
| ஓம் | பாலசுந்தராய | நம: |
| ஓம் | கார்த்திகேயாய | நம: |
| ஓம் | குக்குடத்வஜாய | நம: |
| ஓம் | கலிப்ரத்யஷதேவாய | நம: |
| ஓம் | குஹாய | நம: |
| ஓம் | கௌரீதயையா | நம: |
| ஓம் | கிரிநிவாஸாய | நம: |
| ஓம் | அக்னிஸுனவே | நம: |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஓம் | தண்டபாணியே | நம: |
| ஓம் | ஞானபண்டிதாய | நம: |
| ஓம் | ஸ்கந்தாய | நம: |
| ஓம் | வள்ளிதேவஸேனாபதயே | நம: |
| ஓம் | சரவணபவாய | நம: |
| ஓம் | வேதத்வோப தேசகாய | நம: |
| ஓம் | மஹேச்வரகுரவே | நம: |
| ஓம் | ஷடானனாய | நம: |
| ஓம் | ஸ்வாமி நாதாய | நம: |
| ஓம் | சிகிவாஹாய | நம: |
| ஓம் | வேதமந்த்ர ஸ்வரூபாய | நம: |
| ஓம் | தாரக ஜேத்ரே | நம: |
| ஓம் | ஸேனான்யே | நம: |
| ஓம் | ருத்ரஸம்பவாய | நம: |
| ஓம் | ரூபலாவண்யவிக்ரஹாய | நம: |
| ஓம் | ஸுராராத்யாய | நம: |
| ஓம் | நாதபிந்து கலாதீதாய | நம: |
| ஓம் | ஸுப்ரஹ்மண்யாய | நம: |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ மஹாவிஷ்ணு நாம பூசை

| | | |
|---|---|---|
| ஓம் | விஷ்ணவே | நம: |
| ஓம் | வாஷுதேவாய | நம: |
| ஓம் | த்ருவாய | நம: |
| ஓம் | அச்யுதாய | நம: |
| ஓம் | ஹ்ருஷீகேசாய | நம: |
| ஓம் | புருஷோத்தமாய | நம: |
| ஓம் | லஷ்மிபதயே | நம: |
| ஓம் | கோவிந்தாய | நம: |
| ஓம் | சங்கசக்ரதராய | நம: |
| ஓம் | ஜகந்நாதாய | நம: |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஓம் | பரமாத்மனே | நம: |
| ஓம் | யோகேச்வராய | நம: |
| ஓம் | ஆதிதேவாய | நம: |
| ஓம் | ஆதி மூலாய | நம: |
| ஓம் | த்ரிவிக்ரமாய | நம: |
| ஓம் | ஜனார்த்தனாய | நம: |
| ஓம் | பத்மநாபாய | நம: |
| ஓம் | கேசவாயை | நம: |
| ஓம் | ஹரயே | நம: |
| ஓம் | நர்மஸம்ஸ்தாபகாய | நம: |
| ஓம் | துஷ்டநிக்ரஹகாரிணே | நம: |
| ஓம் | சிஷ்டரசஷகாய | நம: |
| ஓம் | ஷேத்ரபாலகாய | நம: |
| ஓம் | ஸர்வதோமுகாய | நம: |
| ஓம் | ஸத்யதர்மபராயணாய | நம: |
| ஓம் | மஹாயஜ்வனே | நம: |
| ஓம் | நாராயணாய | நம: |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உமையம்மை வழிபாடு

## (108 போற்றி)

| | |
|---|---|
| திருநிலை நாயகி தேவி | போற்றி |
| கருந்தார்க் குழலுமை கௌரி | போற்றி |
| மங்கள் நாயகி மாமணி | போற்றி |
| எங்கும் நிறைந்த இன்பொருள் | போற்றி |
| இளமை நாயகி எந்தாய் | போற்றி |
| வளமை நல்கும் வல்லியே | போற்றி |
| யாழைப் போல்மொழி யாயே | போற்றி |
| பேழை வயிற்றனைப் பெற்றோய் | போற்றி |
| பால்வளை நாயகி பார்பதி | போற்றி |
| சூல்கொண் டுலகெலாம் தோற்றினாய் | போற்றி |
| அறம்வளர் நாயகி அம்மே | போற்றி |
| மறங்கடி கடைக்கண் மனோன்மணி | போற்றி |
| போகம் ஆர்த்த பொற்கொடி | போற்றி |
| பாகப் பிரியாப் பராபரை | போற்றி |
| உலகுயிர் வளர்க்கும் ஒருத்தி | போற்றி |
| மலர்தல் குவிதலில் மணமலர் | போற்றி |
| கத்து கடல்வரா முத்தே | போற்றி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நத்தும் அடியார் நட்பே போற்றி
கற்றவர்க் கின்பக் கடலே போற்றி
மற்றவர்க் கெட்டா வான்வெளி போற்றி
சிவகாமி யம்மைச் செல்வி போற்றி
புவனப் பொருள்களிற் பொருந்தினாய் போற்றி
வலிதா யத்தமர் வண்தாய் போற்றி
கலிசூ ழாவகைக் காப்பாய் போற்றி
வண்டுவார் சூழலி மாதா போற்றி
செண்டாடும் விடைச் சிவையே போற்றி
உண்ணா முலையெம் உயர்தாய் போற்றி
கண்ணார் கழுகுக் கழுத்தாய் போற்றி
பெருத்துறை அரசி பெண்கனி போற்றி
முருந்தேர் முறுவல் முதல்வி போற்றி
வேற்கண் அம்மை மீன்கணி போற்றி
நாற்பெரும் பயன்தரும் நங்காய் போற்றி
மின்னொளியம்மையாம் விளக்கே போற்றி
மன்னொளிப் பிழம்பாய் வளர்ந்தாய் போற்றி
பச்சை நிறத்துப் பைங்கிளி போற்றி
இச்சைக் கிசைந்த இன்பே போற்றி
குவளைக் கண்மலர்க் கொம்பே போற்றி
தவளவெண் நீற்றோன் தலைவி போற்றி
பவள வரைமேற் பசுங்கொடி போற்றி
துவளிடை சிறுத்த தாயோய் போற்றி
குயில் மொழி மிழற்றும் மயிலியல் போற்றி
எயில்மூன் றெரித்த இலங்கிழை போற்றி
தையல் நாயகித் தாயே போற்றி
வையமீன் றளிக்கும் வளத்தாய் போற்றி
மெய்யுரு கடியர் விரும்பே போற்றி
ஆவுடை நாயகி அன்னாய் போற்றி
தேவிற் சிறந்த திருமகள் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டர் அகத்தமர் தூமணி போற்றி
அண்டர் அருந்தா அமிழ்தே போற்றி
பனங்காட் டுருறை பவளே போற்றி
அனங்காட் டும்நடை அழகி போற்றி
தமிழினும் இனிமை சார்தோய் போற்றி
குமிழ்தா மரைமலர் கொடியிடை போற்றி
அமர குமரி ஆனாய் போற்றி
இமவான் பெற்ற இளையாய் போற்றி
மலையத் துவசன் மகளே போற்றி
கலையாய்க் கனிந்த தலைமகள் போற்றி
தக்கன் மகளாய்த் தரிததாய் போற்றி
முக்கட் சுடரின் முதல்வி போற்றி
அலைமகள் அடிபணி நலமகள் போற்றி
கலைமகள் தலைபணி கருத்தே போற்றி
திருவார் கடலில் திகழ்வாய் போற்றி
அருமறைப் பொருளாம் ஆதி போற்றி
உயிருள் ஓவிய உருவே போற்றி
செயிரில் காட்சிச் சேயிழை போற்றி
செந்தமிழ்ப் பாவின் தெளிவே போற்றி
எந்தம் மனத்தில் இருப்பாய் போற்றி
நீலி சூலி நெடுங்கணி போற்றி
மேலை வினைகடி விமலை போற்றி
ஒளிக்குள் ஒளியாய் உயர்வாய் போற்றி
வெளிக்குள் வெளியாய் மிளிர்வாய் போற்றி
நீல மேனி வாலிழை போற்றி
கோலக் கொண்டல் நிறத்தாய் போற்றி
மண்முதல் ஐம்பொருள் வளனே போற்றி
பெண் ஆண் அலியுருப் பெற்றோய் போற்றி
ஆப்பனூர் மேவிய ஆத்தாள் போற்றி
மூப்பிறப் பற்ற முதல்வி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்குணத் தொருவன் இடத்தோய் போற்றி
பண்கனி மென்சொற் பாவாய் போற்றி
பச்சிளம் பெண்ணாய்ப் பகர்வோய் போற்றி
எச்சம யத்தும் இசைந்தாய் போற்றி
யாழிசைப் பண்ணா யமர்ந்தாய் போற்றி
ஏழிசைப் பயனாய் இருந்தாய் போற்றி
அருள்மலி கண்ணுடை ஆயே போற்றி
மருளினர் காணா வான்பொருள் போற்றி
வெற்றி வேல் தடக்கைக் கொற்றவை போற்றி
பற்றிலா நற்றவர் பற்றே போற்றி
இழையாய் நன்மை இழைப்பாய் போற்றி
குழையாய் அகத்தைக் குழைப்பாய் போற்றி
திருநணா மங்கைச் செல்வி போற்றி
உருவும் திருவும் உடையாய் போற்றி
அருந்தவர்க் குதவும் அருளே போற்றி
அருந்துறைத்தமிழின் அமைபொருள் போற்றி
கருநிற ஒளிவளர் கடலே போற்றி
பருவரை மருந்தே பகவதி போற்றி
சூளா மணியே சுடரொளி போற்ற
ஆளாம் அடியர்க் கருள்வாய் போற்றி
மதுரை அரசியாய் வந்தோய் போற்றி
குதிரைச் சேவகன் கொண்டாய் போற்றி
உலகம் உவப்புற வாழ்வருள் போற்றி
பலநல் லனநீ படைத்தருள் போற்றி
உயிர்களின் பசிப்பிணி ஒழித்தருள் போற்றி
பயிர்கள் பயன்தரப் பரிந்தருள் போற்றி
செல்வம் கல்விச் சிறப்பருள் போற்றி
நல்லன் பொழுக்கம் நல்குவாய் போற்றி
போற்றி உன் பொன்னடிப் போது போற்றி
போற்றி புகழிநிறை திருத்தாள் போற்றி
போற்றிதா யுமையே போற்றி போற்றியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாங்கல்ய பாக்கியம் பெற பதினாறு அம்மன்களை வழிபடும் சுலோகங்கள்



## ஆதிபராசக்தி

ஆதி பராசக்தி அம்மை உமையே
தீது வராமல் காக்கும் தெய்வத்தையே
வாது வழக்கு வம்பு தும்பு இவை நீக்கி
மாது எந்தன் மாங்கல்யம் பலம்பெற
நீதி தவறாத உந்தன் பாதம்தனில்
போது நான் பூசைகள் செய்கின்றேன்
பூமகளே பொன்மகளே அருள்வாய் அம்மா
சங்கரி, கௌரி, கிருபாகரி, சுந்தரி, சௌந்தரி, நிரந்தரி
சொரூபிணி, ராஜராஜேஸ்ரி, ஆதிபராசக்தி தாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## காமாட்சி அம்மன்

குங்குமம் சந்தனம் சவ்வாது திருநீறில்
துலங்கிடும் தெய்வத்தாயே
சந்ததம் மிகுந்திடும் காஞ்சியில் குடிகொண்ட
சாந்த சொரூபிணியே! எந்தன்
குங்குமம் துலங்கிட குலமகள் நீயே
அருள் மழை பொழிய வேணும்
அன்னை காமட்சி தாயே!
முன் வினை நீக்கி எந்தன்
முன் வந்து அருள வேணும்
என் வினை போக்கி எந்தன் பூசையை
ஏற்று மகிழ வேணும்
மன்னவனருகே இடம் பெற
மாதவம் செய்யும் தாயே
உன்பதம் பணிந்தேன்
என் வரம் காக்க வேண்டும்
கண்மணி! காமாட்சி கருணைக் கடலே
பெண்மனம் கொண்டவளே பெருமை மிகுதாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விசாலாட்சி அம்மன்

காசழியில் குடிகொண்ட விசாலாட்சி அம்மன்
காரியை உந்தன் பாதமே பணித்தேன்
ஆதிசிவன் உடல்மீது பாதியைப் பகிர்ந்த தாயே
நீதிதவறாத கருணை நெறியாகக் கொண்ட
கோதை நீ என்ற கூறிடக் கேட்டேன்
வேதனைகள் தீர்த்திட வேண்டும்
விரைந்தருள் புரிய வேண்டும்
சோதனைகள் இல்லாமல் சுகவாழ்வு தந்தே
தீவினை அகற்ற வேண்டும்
மாதவம் செய்கின்றேன் எந்தன்
மாங்கல்யம் காத்திட வேண்டும்
ஆதிசக்தி அம்மையே ஆனந்த ரூபிணி
பாவமதைப் போக்கும் புனித காசி விசாலாட்சி அம்மையே
தேவரும் தினம் துதிக்கும் தெய்வத்தாயே
தேடிஉனைச் சரணடைந்தேன் அருள்வாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீனாட்சி அம்மன்

மாமதுரை நகர் சோம சுந்தரர்
மனையாட்சி புரியும் தாயே
தேன்தமழ்ப் பாவலர்கள் சேரும்
கூடல் மாநகர் கோதை மீனாட்சி அம்மை உமையே
மேதினியில் உன்போல் கருணை கொண்டவரிலையே
மாது நீ அருளாது தீது அகன்றிடுமோ
நீதி தவறாத நின் ஆட்சி கண்டு
தேடிவந்தேன் தாயே உந்தன் பாதம்
நாடி வந்தென் அம்மா எந்தன்
கோரிக்கை ஏற்றுக் கூடிக் களிக்கும் எங்கள்
குடும்பம் தழைத்திட குலம் விளங்கிட
கொண்ட வரம் தரவேண்டும் அம்மா
கோடிதவம் இருந்து இருவர் பெறும்பேறு
வாடித் தவித்திடாமல் வரம் தந்தருள வேண்டும்
பாடிப் புகழ்ந்தேன் உன் பாதமே கதி என்றடைந்தேன்
கூடல்மாநகர் கோதை மீனாட்சி அம்மை உமையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகிலாண்டேஸ்வரி



மலையரசி மாதரசி
மங்காத புகழரசி
மாதவத்துப் பேரரசியே
மாணிக்கத் தேரேறி
மகிழ்வாய்ப் பவனிவரும்
மங்கலத் தாயரசியே
கலையரசி கயலரசி
கனிவான மொழியரசி
கல்ண்டுச் சொல்லரசியே
காவியத் தமிழ் நெஞ்சில்
கருணையாம் நிலைதந்து
களிக்கின்ற பூவரசியே

சிலையாக நின்றாலும் சீரான வாழ்வு தரும்
செம்மை சேர் எழிலரசியே!
செல்வானம் பொழிகின்ற சிங்கார அருள்முத்து
தேவியுந் தன் அருளாசியே!
நிலையான வாழ்வுக்கு நீங்காத ஒளியூட்டும்
நெறியான தாயரசியே!
நித்தமும் சித்தத்தில் நின்றுமே அருளூட்டும்
நீடுபுகழ் உலகரசியே
நத்திடும் நங்கையர் மாங்கல்யம் காத்திடும்
நாயகி மாதரசியே நீயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவகாமி அம்மன்



ஆட்டங்கள் ஆடியே அகிலத்தை ஆண்டிடும்
ஆனந்தவல்லி - நீயே!
அழகான நாட்டிய முத்திரை நூற்றெட்டு
அமைந்திட்ட அன்னை சிவகாமியே!
பாட்டரங்கம் கொண்டு பாவலர் நாள்தோறும்
பாமாலை கோடி தருவார்
பாமாலை பாடியே பூமாலை பல சூடும்
பக்தர்கள் நாடி வருவார்
கோட்டங்கள் மண்டபம் கோபுரம் நந்தியும்
கூத்தனின் புகழ் பாடுதே.

கூத்தனுடன் சக்தியும் ஆடிடும் ஆட்டத்தில்
கொடுமைகள் அழிந்தோடுதே
வாட்டங்கள் கோக்கிட வந்திடும் அன்னையே
வல்லி சிவகாமி அம்மையே
வரம் வேண்டிக் கரம்கூப்பும் வறியவர் வாழ்வினை
வளமாக்கும் தேவி உமையே
அழியாத குங்குமத் திலகம் கொண்ட
அன்னை சிவகாமித் தாயே என்றும்
மகிழ்வோடு அருள் தாரும்
அம்மையே உமையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குமரி அம்மன்

கடல் மூன்றின் சங்கமம் கதிரவனின் பேருதயம்
கன்னி உந்தன் ஆட்சியம்மா
கன்னியவள் மூக்குத்தி கப்பலையே காத்திட
கதையுமே சாட்சியம்மா
உடல் எங்கும் சிங்காரம் ஒய்யாரச் சிற்றாடை
உள்ளத்தில் பூக்குதம்மா
ஒப்பற்ற அமுதமுகம் ஒளியூட்டும் குமுதவிழி
உலகத்தைக் காக்குதம்மா
இடரில்லா இன்பத்தை என்றும் தந்திடும்
இணையற்ற குமரி அம்மா!
என்றுமே தவக்கோலம் இருந்துமே மக்களின்
இன்னலை மாற்றுமம்மா!
அடலேறு போலவே அனைவரும் வாழ்த்திட
அன்புடன் அருள்வாயே!
அகிலத்தை ஆண்டிடும் கடல் கொண்ட சக்தியே
அம்மையே கன்னி உமையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொப்புடை அம்மன்

மஞ்சள் முகத்தழகும் மத்தியிலே பொட்டழகும்
மங்களம் தருவதன்றோ!
மாணிக்க மூக்குத்தி மரகதப் பில்லாக்கு
மகிழ்வூட்டும் அலங்காரமே!
அஞ்சனம் தீட்டிய அம்புவில் விழிகளில்
அகிலமே அடக்கமன்றோ!
அழகான காதினில் ஆடிடும் குண்டலம்
அலைகடல் முத்து வகையோ
தஞ்சமென வந்தவரைத் தாங்கிடும் கைகளில்
தவழ்ந்திடும் தங்க வளையல்
தங்கமென நெஞ்சிலே கொஞ்சிடும் மாகைள்
தாயவளின் பொற் குவியலாம்
கொஞ்சிடும் உதட்டிலே கூடிடும் புன்னகை
கோடிக்குக் கோடி பெறுமே
குறையாத வாழ்வினை நிறைவாகத் தந்திடும்
கொப்புடை யம்மை உமையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காந்திமதி அம்மன்

முல்லையுடன் மல்லிகை முத்தார அணிபூட்டி
முடிசூடும் அன்னை நீயே!
மோகனப் புன்னகை பூத்திடும் இதழ்களில்
முத்தமிழ் சிந்துவாயே!
கல்லையும் கனியாக்கும் கற்கண்டு மொழிதந்த
கண்கண்ட தெய்வம் நீயே!
கடலையும் அலையையும் காலத்திற் கிணைசொன்ன
காவியச் சோலை நீயே!
எல்லையே இல்லாத நல்லையம்பதியினில்
ஏற்றிய தீபம் நீயே!
எங்குமே இருள்நீக்கி இனியநல் அருளூட்டும்
ஈசனின் பதியும் நீயே!
தொல்லைகள் மறைந்திட தொண்டுள்ளம் மலர்ந்திடத்
தூயவரம் அருளுவாயே!
தும்பிக்கை கணபதி தோகைமயில் முருகனுடன்
தோன்றிடும் காந்திமதியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அபிராமி அம்மன்

ஆழிசூழ் உலகத்தை அன்பாலே காத்திடும்
அன்னையே அருள் நாயகி
அமுதான கடவூரில் பட்டருக்கருள் செய்த
அம்மையே புகழ் நாயகி
வேழமாய் ஒருபிள்ளை வேலோடு மறுபிள்ளை
மேன்மையாய் பெற்ற தாயே!
வினைதீர்க்கும் குங்குமம் மஞ்சளில் விளங்கிடும்
வேள்வியே! கோதை நீயே!
ஏழிசை நாதத்தை எழுப்பியே மகிழ்ந்திடும்
இணையற்ற இசை வல்லியே!
எங்குமே மங்கலம் பொங்கியே தங்கிட
இயங்கிடும் சக்தி நீயே!
வாழியென அன்போடு வாழ்த்திடும் சொல்லாண்டு
வாழ்ந்திடும் தமிழ் நாயகி
வளம் கூட்டும் கரும்புவில் வழங்கிடும் காட்சியே
வள்ளல் நீ அபிராமியே!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கருமாரி அம்மன்

பூக்காட்டில் மணம் பரப்பி புகழ்க்காட்டில் வீற்றிருக்கும்
பொன்னாரம் அன்னைமாரி
புகழான திரிசூலம் பவனத்தை வழ்விக்கும்
பொற்புடைய தேவிமாரி
வேற்காட்டில் வாழ்ந்திருந்து வேதனைகள் தீர்க்கின்ற
வெண்குடை முத்துமாரி
வித்தைபல செய்துமே சித்து விளையாடிடும்
வெற்றி நகை கொண்டமாரி
சாக்காட்டுச் சிந்தைதனை சாகடித்து இன்பத்தைத்
தருகின்ற பொன்னிமாரி
சக்திதனை உண்டாக்கும் சக்தியிவள் என்றுமனம்
சாற்றுகின்ற அன்னைமாரி
ஆக்கங்கள் பலகூட்டி ஆற்றல்கள் பலவூட்டி
அன்புதரும் சக்திமாரி
அழகான வேற்காட்டில் சுடராக வாழ்கின்ற
அன்னை கருமாரி உமையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மாரியம்மன்

இமயத்தில் பிறந்தாலும் இதயத்தில் வாழ்கின்ற
இணையற்று தாமுதமே!
இல்லாமை இல்லாமல் எல்லோரும் வாழ்ந்திட
எழுந்தருளும் அருளமுதே
சமயத்தில் வரும் இன்னல் தகர்த்திடும் அன்னையே
சமயபுர மாரியம்மா
சஞ்சலம் நீக்கிடச் செஞ்சுடர் காட்டிடும்
சக்தியே தேவியம்மா
உமையவளின் மறுவுருவமாய் உலகத்தைக் காக்கின்ற
ஓங்கார வல்லி நீயே!
உன் அருளில் பிள்ளைகள் உயர்வோ வாழ்ந்திட
உற்ற வழி சொல்லுவாயே!
அமைத்திட்ட வாழ்க்கையும் சக்கரமாய் சுற்றிட
ஆறுதல் செப்புவாயே
ஆறுதல் கூறியே மாறுதல் தருகின்ற
அம்மையே மாரியுமையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மூகாம்பிகை அம்மன்

ஏகாந்த ஏட்டிலே எழுத்தாகி ஒலித்திட்ட
இறையருள் கடல் முழக்கமே
இறவாத காவியம் இனிதான ஓவியம்
எழுதிடும் மொழி முழக்கமே!
சாகாத தர்மங்கள் தருகின்ற கரங்களும்
சக்கரப் பொருள் விளக்கமே
சாந்தியம் அமைதியும் தந்திடும் மந்திரம்
சக்தியின் அருள் விளக்கமே
நோகாத உள்ளங்கள் நுண்கலை விளக்கங்கள்
நோக்கமுறத் தந்தருள்வாய்
ஆகாத செயலினால் அரும்பிடும் ஆசையை
அழித்துமே சிரித்து மகிழ்வாய்
பாங்கான சொல்லுக்கும் பண்பான செயலுக்கும்
பதியான ரதி தேவியே
பைந்தமிழ் அமுதத்தை தேனாகப் பருகிடும்
பாவையருள் முகாம்பிகையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பவானி அம்மன்

உள்ளத்தின் ஆசையை ஒப்பற்ற ஓசையாய்
ஒலித்திடும் ஓங்காரியே!
உலகத்தின் ஆசையை உதிக்கின்ற அருளாக
ஒளிர்கின்ற ரீங்காரியே!
பள்ளத்தில் விழாமல் பாவங்கள் செய்யாமல்
பண்பாக்கும் சிங்காரியே!
பாசமுடன் கருணையை பாகாகக் குழைத்துமே
பசி தீர்க்கும் அலங்காரியே!
கொள்ளைகள் கொடுமைகள் இல்லாத வாழ்வுமதை
கொடுத்திடும் மின்னல் ஒளியே!
கொஞ்சிடும் குழந்தைகள் கோரிடும் வரங்களைக்
கொடுக்கின்ற அன்னை விழியே!
வெள்ளையம் பாளையம் வேப்பிலை ஆலயம்
வெகுவாகப் பெற்ற தாயே!
வினைதீர்க்கும் சோலையாம் பெரிய நற் பாளையம்
வீற்றிடும் பவானி உமையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொற்றவையம்மன்

நல்லதைச் சொல்லென்றும் நல்லதைச் செய்யென்றும்
நயம்படச் சொல்லும் தாயே!
நஞ்சுஎண்ணம் கொண்ட இச்சையாய் அலைவாரை
நசுக்கிடும் அன்னையே நீயே!
பொல்லாத செயலினைப் பொடிப் பொடியாக்கிடும்
பொன் சுடர் தீபம் நீயே!
புகழுடைய வாழ்விற்குப் பொன்முடி சூட்டியே
பூத் தூவி வாழ்த்துவாயே
கல்லாத மாந்தரின் கண்ணீரை நீக்கிடும்
கருவண்ண அன்னை நீயே!
கற்றோரின் நெஞ்சத்தில் கலங்கரை விளக்கான
காவியச் சுடரும் நீயே!
வில்லாக வேலாக வினை தீர்க்கும் மருந்தாக
விளங்கிடம் சக்தி நீழுயே!
வேண்டிடும் நல்வரம் விரைவாகத்தந்திடும்
வெட்டுடை காளியுமையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# துர்க்கை அம்மன்

சிங்காரச் சிற்றாடை சிகப்புநிறப் பட்டாடை
தேவியருள் திருக்காட்சியே
சிவகெங்கைச் சிற்றூரில் சீரான அலங்காரம்
தெவிட்டாத கண்காட்சியே
மங்காத புகழும் மலர்கின்ற வாழ்வுக்கும்
மாயவளின் அருளாட்சியே
மருவிடும் தீவினை மாய்ந்துமே மறைந்திட
மாதவளின் அரசாட்சியே!
கங்கையில் குளித்திட்டு காவிரியில் பொட்டிட்ட
காவியப் புகழரசியே!
கன்னியர் மணமாலை கனிந்துமே சூட்டிடும்
கருணை மழை பொற் காட்சியே!
மங்கள முழக்கங்கள் தங்கியே ஒலித்திடும்
மங்கையின் எழிலாட்சியே!
மலர்கின்ற புகழாரம் என்றுமே தந்திடும்
மாதேவி துர்க்கையுமையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சந்தான பாக்கியம் அருளும் சந்தான லட்சுமி துதி

பெண்ணாய் பிறந்த பெரும்பயனை நாற்பெறவும்
கண்ணே கனியமுதே எனத் தாலாட்டவும்
அம்மே உன் மலரடி பணிந்தேன்
அருளே சந்தான லட்சுமித்தாயே
''புத்'' எனும் நகரத்துக்குப் போகாமல்
''தத்'' எனும் விவகாரத்தில் வீழாமல்
இத்தருணம் அருள்வாயே தாயே
நத்தினேன் உன்மலரடி சந்தானலட்சுமியே!

(இந்த சுலோகத்தை தினம் 24 முறைகள் ஜெபித்து வந்தால் புத்திரபாக்கியம் என்னும் மகப்பேறு பாக்கியம் கிடைக்கும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நினைவலைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரத்துவம் அடைந்த திவ்யா சுதாகரன் அவர்களின் வாழ்க்கை வரலாறு

ஈழமணித் திருநாட்டின் வடக்கின் சிரசென மிளிரும் யாழ்ப்பாணத்தில் ஸ்ரீ சித்திர வேலாயுதப் பெருமான் அருளாட்சி புரியும் வட கோவையம் பதியில் விக்னேஸ்வரலிங்கம் - ஞானமணி தம்பதிகளின் இல்லறத்தின் பயனாக அமரத்துவம் அடைந்த திவ்யா அவர்கள் 16.06.1979 இல் பிறந்தார். இவர் கேதீஸ்வரன், பிரதீஸ்வரன், லிங்கேஸ்வரன் ஆகியோரை அன்பு சகோதரர்களாகவும் சந்தியாவை அன்பு சகோதரியாகவும் அமையப் பெற்றார்.

தனது ஐந்தாவது வயதில் ஆரம்பக்கல்வியை கோப்பாய் வடக்கில் அமைந்துள்ள சரவணபவானந்த வித்தியாசாலையில் ஆரம்பித்தார். இவர் அங்கு கல்வி கற்று வரும் நாட்களில் யாவராலும் பாராட்டத்தக்க வகையில் இயல், இசை, நாடகம் ஆகிய சகல துறைகளிலும் மிளிர்ந்து விளங்கியதுடன் பரிசில்கள் பலவற்றையும் பெற்றுத் திறமை மிக்க மாணவியாக திகழ்ந்தார். அத்துடன் சிறுவயதில் இருந்தே ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி கோவில் பஜனை குழுவில் இணைந்து வெள்ளிக்கிழமைகள் தோறும் பஜனை செய்து வந்ததோடு கோவில் தொண்டுகளிலும் ஈடுபட்டு வந்தார்.

புலமைப்பரிசில் பரீட்சையில் திறமைச் சித்தியெய்தி யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இணைந்து தன் இடைநிலைக் கல்வியினைத் தொடர்ந்த திவ்யா அங்கும் ஆசிரியர்களின் நன்மதிப்புக்கு பாத்திரமாகியிருந்த நிலையில் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை நிமித்தம் கொழும்புக்கு புலம்பெயர வேண்டிய தேவையேற்பட்டது. அங்கு தொழில் புரிந்து வந்த தனது தந்தையுடனும், பெரியதந்தையுடனும் தங்கியிருந்து, விட்டுச் சென்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியை பம்பலப்பிட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்ப் பாடசாலையில் தொடர்ந்து, க.பொ.த சாதாரண தரத்தில் சித்தி பெற்று உயர்தரக் கல்விக்காக பம்பலப்பிட்டி இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியில் இணைந்தார். க.பொ.த உயர்தரத்தில் உயர் சித்தி பெற்ற இவர் கொழும்பு பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகி வணிகமானி பட்டத்தினை சிறப்புச் சித்தியுடன் பெற்றார். இத்தருணத்தில் CIMA தொழில் முறைத் தகுதியையும் அடைந்தார்.

தொடர்ந்து இலங்கை வங்கியில் வேலை வாய்ப்பைப் பெற்று தொழில் புரிந்துவரும் வேளையில், வறணியை சொந்த ஊராகக் கொண்ட தம்பையா கமலாம்பிகை தம்பதிகளின் சிரேஸ்ட புதல்வன் சுதாகரன் அவர்களைக் கரம்பிடித்து இல்லறம் என்னும் நல்லறத்தில் இணைந்தார். இல்லற வாழ்வின் பயனாக அத்சயன், கேசிகன் என்னும் இரு நற்புத்திரர்களைப் பெற்றெடுத்தார். இவ்வாறு வாழ்ந்து வரும் வேளையில் இவர்களுக்கு அவுஸ்திரேலியாவுக்கு சென்று வாழ்வதற்கான குடியுரிமை கிடைக்கப்பெற்று 2011ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியா சென்று அங்கு மகிழ்ச்சியான ஒரு குடும்பமாகப் பலரது நன்மதிப்பையும் பெற்று வாழ்க்கை நடாத்திக் கொண்டிருந்தனர். இத்தருணத்தில் வைகாசித்திங்கள் 10ஆம் திகதி சத்திர சிகிச்சைக்காக வைத்தியசாலை சென்றவர் பின் திரும்பி வரவே முடியாமல் போய்விட்டது. இவரது புனித ஆத்மா வைகாசி திங்கள் 18ஆம் திகதி இறைவன் திருவடியில் அமைதியடைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Mum

Mum you're a wonderful mother,
so gentle, yet so strong.
The many ways you show care,
Always make me feel like I belong.

You're patient when I'm foolish,
You give guidance when I ask,
It seems you can do anything,
You're the master of every task,

You're dependable source of comfor
My cushin when I fall,
You help me in times of trouble,
You answer me when I call,

I love you more than you know,
You have my total respect,

By. Your loving son
Athsayan Suthakaran



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயாரின் தவிப்பு

கருவினில் உதித்த நாளில் தொடங்கிய பாசம் ஓங்கி
திருவதன் அழகு சேரச் சிறப்புடன் வாழ்ந்த உன்னை
கருமனக்காலன் தீயன் நோயெனும் உருவில் தாக்கி
உருவத்தை மறைத்து விட்டான் உருகியே அழுகின்றேனே

## தந்தையின் தவிப்பு

வஞ்சமில் நெஞ்சி னோடு அன்புறுவார்த்தை பேசி
நெஞ்சதில் உரத்தி னோடு கலைகளும் கற்ற உன்னை
வஞ்சகன் காலன் பாசக் கயிற்றினை ஓங்கி வீசி
துஞ்சிடச் செய்த செய்தி துயரத்தில் வாட்டு தம்மா

## அண்ணன்மார் அலறல்

தங்கச்சி என்று உன்னை தரணியில் அழைத்து நாங்கள்
பொங்கிடும் மகிழ்ச்சி யோடு பழகினோம் நாளும் நன்றாய்
எங்குதான் சென்று விட்டாய் ஏங்கினோம் உன்னை எண்ணி
மங்குதே எமது வாழ்க்கை மரணம் நீ அடைந்ததாலே

## அத்தானின் அலறல்

மண்ணினில் கல்வி, செல்வம் என்பதில் உயர்வு எய்தி
மண்ணுளோர் போற்ற வாழ்ந்த மாதவச்செல்வி நீயே
விண்ணில் நீ சென்று விட்ட செய்தியைக் காதில்க் கேட்டு
கண்ணிலே நீர் நிரம்பக் கதறியே அழுகின் றேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அக்கா அலறல்

திவ்யா என்ற சொல்லே தெய்வத்தின் தன்மை என்று
புவியினில் அறிஞர் சொன்ன புண்ணிய வார்த்தை போல
பொய்ம்மைசேர் உலக வாழ்க்கை நீத்து விண்ணில் சென்று
தெய்வமாய் ஆகி விட்டாய் தேம்பி நான் அழுகின்றேனே

## மைத்துனிமார் மறுகல்

மச்சாளே என்று இனிநாம் அழைப்பது யாரை அம்மா
துச்சமாய் வாழ்வை எண்ணித் துணிவுடன் வாழ்ந்த நீரோ
பட்சமாய்ப் பழகி எங்கள் மனதை நீ குளிர்விப் பாயே
கச்சானாம் காற்றில் பட்ட தூசிபோல் துயரம் கொண்டோம்

## புத்திரர் புலம்பல்

இன்பமாய் அம்மா என்று அவனியில் இனிமேல் யாரை
அன்புடன் அழைப்போம் நாளும் சந்திரன் இல்லா வானம்
போன்றிடும் இருளாம்வாழ்வில் ஒளியின்றித்தவிக்கின் றோமே
என்பொடு ஊனும் நெக்காய் உருகுதே உள்ளம் வேகும்

## தம்பி தடுமாறல்

அக்காவே என்று நாளும் அழைத்திட அருகில் வந்து
சொக்கையில் கிள்ளி நல்ல சொக்கிடும் கதைகள் சொல்வாய்
சொக்கனாம் சிவனின் பாதம் அடைந்திட்ட செய்தி கேட்டு
திக்கொடு திசைகள் ஒன்றும் தெரியாமல் திகைக்கின் றேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணவனின் கதறல்

என்னுயிர்த் துணைவி யாகி மனைக்குநீ தலைவி யாகி
பொன்னிகர் மனத்தி னோடும் செல்லமாய் மொழிகள் பேசி
புன்னகை உதிர்த்து வாழ்ந்த நாயகி நாளும் உன்னை
அன்புடன் நெஞ்சில் வைத்துப் பூசைனை புரிகின் றேனே

## உறவுகள் உளறல்

இரத்தத்தின் ஒன்றே யான சொந்தத்தில் தோன்றி நீயோ
அர்த்தமாய் அவனி மீதில் உயர்வுடன்வாழ்ந்த உன்னை
வருத்தமாம்உருவில் வந்து உடலினுள் புகுந்த காலன்
வருத்தியே உயிர் கவர்ந்தான் வாழ்வெல்லாம் கானல் ஆச்சே

## ஊரார் உருகல்

கோவையாம் எங்கள் ஊரில் உதித்துநீ கல்வி கற்று
தேவரும்போற்ற வாழ்ந்த தேவிநீ எங்கு சென்றாய்
சேவைகள் பலவும்செய்து செம்மையாய் வாழ்ந்த நீயோ
தேவரின் உலகு சென்ற மர்மமும் தெரிய வில்லை

## சித்தி குடும்பம் புலம்பல்

பெற்றிடா மகளுமாகி பாரினில் உதித்த நீயோ
கற்றிட்ட கல்வி யாலும் செல்வத்தி னாலும் ஓங்கி
பெற்றவர் மகிழும் வண்ணம் வாழ்ந்திட்ட பொழுதில் நீ ஏன்
உற்றவர் துயரம்கொள்ள உம்பரின் உலகம் சென்றாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாமா குடும்பத்தினர் புலம்பல்

பெருமக ளாக நீதான் வாழ்ந்துநற் பெருமை சேர்த்தாய்
மருமகள் என்று நாங்கள் மகிழ்வுடன்அழைக்க நாளும்
திருமகள் ஆக வாழ்ந்த திவ்யாநீ மறைந்த தாலே
உருகியே அழுகின் றோமே அனல்மேல் மெழுகு போலே

## சித்தப்பா குடும்பத்தினர் புலம்பல்

எங்குல விளக்காய் மண்ணில் தோன்றிய திவ்யா நீயோ
மங்கல வாழ்க்கை சேர மகிழ்வுடன்வாழ்ந்த போது
வெங்குணக் காலன் உந்தன் உயிரினைக் கவர்ந்த செய்தி
எங்களின் இதயம் தன்னில் அம்பெனத் தைத்ததம்மா

## தர்சினி மச்சாள் குடும்பம் தவித்தல்

கலைமகள் கருணை பெற்று கல்வியில் உயர்ந்த நீயோ
தொலைவினில் வாழ்ந்த போதும் அன்பினால் பாலம் போட்டு
நிலைபெற்ற உறவுவேண்டிப் பழகியே பிரிந்த தாலே
வலையினில் வீழ்ந்த மீன்போல் வாடியே துடிக்கின் றோமே

## தேற்றம்

குஞ்சரம் ஊர்ந்த கோவும் குவலய வாழ்வு தன்னில்
வஞ்சகன் காலன் கையில் சேர்வது உறுதி என்ற
வஞ்சமில் வார்த்தை தன்னை மனதில் எண்ணி நாளும்
நெஞ்சினில் உறுதி யோடு பற்றில்லாக் கடமை செய்வீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு மகன் அத்சயன் உள்ளத்தில் இருந்து என் அன்பு அம்மா

என் அம்மா! என் இனிய அம்மா!

உன்னைப் போல் ஒரு அன்பு அம்மா எனக்கு கிடைக்க நான் என்ன தவம் செய்தேனோ!

என் கல்வி வளர்ச்சிக்காக எத்தனை புத்தகங்களை எல்லாம் தேடித் தேடி வாங்கித் தந்தாய். எத்தனை இடங்களில் கல்வி புகட்டுவதற்காகக் கொண்டு சென்றாய். நாளும் பொழுதும் உணவை ஊட்டும் போது கல்வியையும் சேர்த்து ஊட்டிவிடுவாய். நான் உன் மனம் கோண நடந்த போதெல்லாம் அதைத் தாங்கிக் கொண்டு என்னை அணைத்து வைத்திருந்து ஆறுதல் கூறுவாய். நீ என்னையும் தம்பியையும், அப்பாவையும் விட்டுவிட்டு எங்கு சென்றாய்?

அம்மா நான் உனக்காக இனி செய்யக்கூடியது ஒன்றே ஒன்றுதான் அம்மா! அது நீ விரும்பியது போல நான் கல்வியை நன்கு கற்று நல்ல நிலைக்கு வருவதற்கு இயன்றவரை முயற்சிப்பேன் அம்மா! என் அன்புத் தம்பியை என்றும் அழ வைக்காமல் நடந்து கொள்வேன் அம்மா! அப்பா சொல் கேட்டு நடந்து கொள்வேன் அம்மா! என்றும் உன்னை நினைத்து என் கடமைகளை நிறைவு செய்வேன் அம்மா! உன் ஆசீர்வாதம் என்னை என்றும் எதிலும் வெற்றி அடையச் செய்யும் என்பது உறுதி அம்மா.

என் அன்பு அம்மாவுக்கு என் அன்பு முத்தங்களும் வணக்கங்களும் அம்மா!

**என்றும் உன்னை மறக்காத**
**உன் உயிர் அத்சயன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு மகன் கேசிகனின் மழலை வார்த்தைகளில் என் அம்மா

அம்மா! என் அன்பு அம்மா!
ஆசை முத்தம் தருவார்! அணைத்துகொண்டே இருப்பார்!
இனிக்க இனிக்க உணவை ஊட்டி ஊட்டி விடுவார்!
உண்ணும் அழகைப் பார்த்து ரசித்துக் கொண்டே இருப்பார்!
உறங்கும் போது என்னை அணைத்துக் கொண்டே உறங்குவார்!

அழகிய உடைகள் அணிந்து அழகு பார்த்து ரசிப்பார்!
படிப்பதற்கு நல்ல பாடம் சொல்லி தருவார்!
படிக்க நானும் மறுத்தால் அணைத்து முத்தம் தருவார்!

பின்பு நானும் அம்மா சொன்னபடி நடப்பேன்!
அண்ணா என்னை அடிக்கத் துரத்திக்கொண்டு வருவார்!
அப்போதெல்லாம் என்னை அணைத்துக் கொண்டே இருப்பார்!

அண்ணாவுக்கு என்மேல் கொள்ளையான ஆசை!
அவரும் வந்து என்னை அணைத்து முத்தம் தருவார்!
அம்மா போல தெய்வம் உலகில் யாரும் இல்லை!

"அவரை வணங்கி நாங்கள்
வாழ்வில் உயர்ச்சி அடைவோம்."

**அம்மாவின்**
**செல்லக் குட்டி கேசிகன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THIVYA MAMI

No more your face to look upon,
Or your beautiful smile to see.
Though deep inside our hearts,
You still reside with us.
Thivya mami,
You touched the heart of many,
Like only an angel can do.
We would have held you for every minute,
If the end, we only knew.
You are very intelligent,
I wish I was like you.
I try to reach your heights,
But there will be only one Thivya mami.
When you call us every weekend,
You always have
Your weepothi koori and pottu,
I've never seen you one day without it.
I know you are up in heaven,
And are watching over us.
And if God had a best angel,
I'm sure of who it would be.
We miss our times together,
Things in common we could share,
But nothing fills the emptiness,
Now you're no longer there.
Thivya mami,
Appa misses you a lot.
And you will always be in our hearts forever.

**Love Ashvinya Pratheesh**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புள்ள திவ்யா அத்தை . . .

ஒரு நாள் நான் பாடசாலையில் இருந்து வந்தபோது வீட்டில் எல்லோரும் அழுது கொண்டு இருந்தனர். என்ன நடந்தது என்று கேட்ட போது திவ்யா அத்தை வைத்தியசாலையில் உள்ளார் என்று சொன்னார்கள். ஆனால் எனக்குப் புரியவில்லை. அத்தை இன்னும் சில நாட்களில் வந்திடுவார் என்று எண்ணியிருந்தேன். தொடர்ந்து எல்லோரும் அழுதுகொண்டு இருந்தனர். திடீரென எனது அப்பம்மா அவுஸ்ரேலியாவிற்கு புறப்பட்டார். அவர் சென்ற இரண்டு நாட்களின் பின் எனது அப்பா அவுஸ்ரேலியாவிற்கு புறப்பட்டார். அதன் பின் தான் நான் அத்தையை பார்க்க முடியாது என்ற உண்மையை புரிந்தேன்.

நீங்கள் எங்களுடன் இருந்த போது, நாங்கள் எவ்வளவு மகிழ்ச்சியுடன் இருந்தோம். கடந்த கிறிஸ்மஸ் லீவின் போது கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் எங்களுடன் நீங்கள் இருந்ததை நினைத்துப் பார்க்கின்றேன். இனி அதற்கு வாய்ப்பில்லை எனும் போது என்னால் தாங்க முடியவில்லை. என் கண்கள் இரண்டும் கண்ணீர்த் துளிகளால் நிரம்புகின்றன.

இறை பக்தி மிக்க எனது திவ்யா அத்தையை பிரிந்த நான் மிகவும் கவலை அடைகின்றேன். ஆனால் நாங்கள் எங்கு சென்றாலும் எமது மனதில் அன்புள்ள திவ்யா அத்தை என்றும் இருப்பார்.

உங்கள் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
மதுசனா. கேதீஸ்வரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THIVYA AUNTY

Amazing, breathtaking and exquisite,
Incredible, irreplaceable and indescribable
When I hear these words
I think of you

The stories you shared
The life you lived
The time you spent with us,
I treasure them

Your candid laugh,
Your cheeky smile
Your caring nature
Your hilarious jokes
I keep them close to my heart

Your eyes as they glistened in the sun
Your voice as they made our heart glow:
Your smile as the lip up the whole room:
Your presence as they changed our world:
I will always remember

You transformed and brightened our lives
Aunty we love you
And we will really miss you

**Shasvini & Hrishoth**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புள்ள திவ்யா சித்தி

நீங்கள் இவ்வுலகை விட்டு நீங்கினாலும், எமக்கு விட்டுச் சென்ற நினைவுகள் பல. கொழும்பில் உங்களைச் சந்தித்த போது குறும்பு கலந்த அன்புடன் பழகியது உங்களது தனி இயல்பு. தொலை தூரத்தில் நீங்கள் வாழ்ந்த போதும், அடிக்கடி எம்முடன் தொலைபேசியில் பேசுவது உங்களை மிகவும் நெருக்கமாக்கி விட்டது.

இன்று எம்மை விட்டு நீங்கினாலும் உங்கள் நினைவுகள் என்றும் நித்தியமானவை. ஆண்டாண்டு தோறும் அழுது புலம்பினாலும் ஆண்டவனால் அரவணைக்கப்பட்டவர் மீண்டும் வருவதில்லை என்பதே இயற்கை காலங் காலமாக வகுத்த நியதி.

தங்களது ஆத்மா சாந்தியடைய மனமுருகிப் பிரார்த்திக் கின்றோம்.

**- தேனுஜா, கிரிஷாந்**

***''நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்றும் பெருமை உடைத்து இவ்வுலகு.''***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு அப்பா அம்மாவின் உள்ளத்தில் இருந்து

எங்கள் குடும்பத்தின் திவ்ய ஜீவ ஒளியாக இருந்து எம்மை எல்லாம் வழி நடத்தி வந்த அன்புத் தெய்வமே! உனது பிரிவினால் நாம் இருவரும் துடியாய் துடிக்கின்றோம். நீ சத்திரசிகிச்சைக்கு டாக்டர் நாள் குறித்து விட்டார் நீங்கள் இருவரும் விரைவாக வாருங்கள் என்று எம்மை அழைத்தாய். அது கேட்டு நானும் உடன் ஓடி வந்தேன். அம்மா சில நாட்கள் கழித்து வருவதாக கூறியிருந்தார். நீயும் அதை ஏற்றுக்கொண்டாய். வைத்தியசாலைக்கு 10.05.2018 வியாழன் அன்று காலை அப்பா போய் வருகின்றேன். பிள்ளைகளை கவனமாக பாருங்கள் என்று கூறி விடை பெற்றுச் சென்றாய். அதன்பின்னர் நீ சத்திர சிகிச்சை முடிந்து வருவாய் என்று நாம் எல்லோரும் வழிமேல் விழிவைத்து காத்துக் கொண்டு இருந்தோம். சத்திர சிகிச்சை முடிந்து நீ வந்த காட்சி எம் எல்லோரையும் திகில் அடைய செய்து விட்டது அம்மா!

உன்னைப் பார்ப்பதற்காக பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்து உன் அம்மா, அண்ணன்கள் ஈசன், பிரபா, அக்கா சந்தியா, தம்பி லிங்கா மற்றும் உன் மாமா, மாமி, மைத்துனிமார் எல்லோரும் பறந்து வந்தார்கள். வந்தவர்கள் உன் முகம் கண்டு அதிர்ந்து போனார்கள். உன்னைச்சுற்றி உன் அன்புக் கணவன் ஊண் உறக்கம் இன்றிக் காத்து நின்றார். உன் மழலை செல்வங்கள் உன் முகம் அறியாது ஏங்கி நின்றனர்! உன் இனிய முகம் பார்த்து உன்னுடன் பழகிய உறவினர்கள், நண்பர்கள் எல்லோரும் ஒவ்வொரு நாளும் ஓடோடி வந்து நீ உயிர் பிழைக்க வேண்டும் என்று இறைவனை வேண்டி நின்றனர். ஆனால் நீயோ எல்லோரையும் ஏங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்துவிட்டு இறைவன் திருவடியை சரண் அடைந்து விட்டாய் அம்மா.

நீ உலகை விட்டு சென்ற செய்தி உலகமெல்லாம் இருந்த உன் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் எல்லோரையும் ஆறாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டதம்மா. அவர்கள் எமக்கெல்லாம் ஆறுதல் கூறினர். உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்தனர். இவ்வளவு மனங்களின் அன்பையும் பெற்றிருந்த நீ ஒரு அற்புதமான பிறவி அம்மா. அதை எண்ணி எம்மனம் சிறிது ஆறுதல் பெறுகிறது அம்மா.

**உன்னை என்றும் மனத்தில் இருத்தி வாழும்**
**அம்மா அப்பா**

# மாமன் மாமி புலம்பல்

எங்கள் குடும்பத்தில் ஒளியேற்ற வந்த
குத்துவிளக்கே!
எம் ஆசை மருமகளே!
எம்மை மாமா மாமி என்று உமது
இனிய குரலால் அழைத்து பாசத்தை
பொழிந்தீரே!
இனி நாம் எங்கு கேட்போம் உமது
இனிய குரலை!
மிக விரைவாக பாதியிலே எம்மையெல்லாம்
தவிக்கவிட்டு நீர் விண்ணுலகம் சென்றதேனோ?
மீண்டும் ஒருமுறை வாரீர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பி லிங்காவின் உள்ளத்தில் இருந்து அன்பின் திவ்யா

அக்கா,
சத்திரசிகிச்சைக்காக வைத்தியசாலைக்குச் செல்கிறேன் - எனத்
தொலைபேசியில் கூறிச் சென்றாயே!
சுகமாக திரும்பி வருவாய் என காத்திருந்த - எங்களை
அலைவரிசை கொண்டு வந்த செய்தி அதிர வைத்து விட்டதடி
உயிருக்காய் போராடுகிறாய் எனத் தகவல் கிடைத்தவுடன்
ஓடோடி வந்தேனே உன் முகம் பார்க்க - ஆனால்
ஏமாற்றிச் சென்றதேனோ...
''லிங்கா லிங்கா'' என்ற அன்பான அழைப்பையும்
குறும்பான செல்லப் பேச்சுக்களையும் - இனி
நான் எங்கே கேட்பதடி....
நீ .....
என் பிள்ளைகளை அணைத்து
முத்தம் கொடுக்கவில்லையே என்ற
நினைப்பே
என் வேதனையைக் கூட்டுதடி
அக்கா...
இந்நாள் வரை அக்கா என அழைத்தறியேன்
நான் திவ்யா என்க; நீ லிங்கா என்க;
இன்று திவ்ஜ ஜோதி ஆகிவிட்டாயே
இனி
நான் கூறுவது ஒன்று தான்
உன் இரு கண்மணிகளும் - இனி
என் பிள்ளைகளே...

**உன்னை பிரிந்து ஏங்கி நிற்கும்**
**அன்பு லிங்கா, கௌரி, பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்துனிமார் புலம்பல்

எம் ஆருயிர் அண்ணியே!
எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
நீண்டதூரம் சென்றதேனோ!
இள வயதில் எம்மைவிட்டு
எங்கு சென்றீரோ?
அளவற்ற துன்பத்தால்
அனற் புழுவாய்த் துடிக்கின்றோம்
உளம் நிறைய வாழ்ந்திருந்த
உத்தமியே எங்கு சென்றீர்?
வளமிழந்து வாடுகின்றோம்!
நீண்ட துயர் கொள்கின்றோம்
மீண்டும் வருவீரா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Dear Thivya,

Writing this note reminds me of my letters as a child, to you and your family in Sri Lanka. All that I had then was an image of you, built from the occasional photos, sent over to Malaysia.

So, I was glad when I got to meet you in person back in 2002. You were an awesome host and I had glimpses of the amazing woman that you had blossomed into. You never allowed circumstances, no matter how challenging they were, to hold you back from becoming the wonderful person that you were meant to be.

10 years on, in 2012, Kuhan had the privilege to meet you. Though it was an equally short trip, he too had the opportunity to bond with you, one that was further strengthened by the conversations he had with you over the phone.

Among his fondest memories, were those of you being always up and about, on your feet, ever ready to lend a hand. He understood then, just as I did back during my visit, as to why cheeniamma always spoke very highly of you.

Truth is, your absence will be felt very deeply. Cheeniamma and Cheeniappa will miss you very much. They continue to speak about you, sharing with us, the wonderful memories they had with you.

As much as we are saddened by your untimely passing and find it hard to come to terms with it, we believe that God has different plans for you.

May you Rest in Peace, Om Shanti!

**With lots of love,**
**Cheeniamma, Cheeniappa,**
**Eeswaran, Sugitha, Aeshan, Rupini & Kuhan**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கு சென்றாய் திவ்யா

பாசத்தின் உயர்விடமாய்
பண்பின் பிறப்பிடமாய்
பார்போற்ற வாழ்ந்தவரே - எம்
அன்பான குலவிளக்கே

காலன் அழைத்திடவே
கண் இமைக்கும் சிறு பொழுதில்
எமை விட்டுப் பிரிந்தாயம்மா
ஆறாத் துயரில் எமை ஆழ்த்தி - நீர்
மீளாத்துயில் கொண்டதேனோ!

திடுக்கிடவைத்ததம்மா - நீர்
எமை விட்டு பிரிந்த செய்தி
ஊர் விட்டு ஊர் சென்று - உம்
உயிர் பிரிந்ததேனோ!
தேம்பித்தேம்பி அழுகின்றாம்
தேற்றுவார் யாரும் இல்லை
எங்கம்மா சென்றாய் திவ்யா!

கோப்பாய் மண்ணில் பிறந்து
கொழும்பு நகரில் வளர்ந்து
காலத்தின் அழைப்பதனால்
கடல் கடந்து சென்றாயம்மா
அவுஸ்ரேலியா மண்ணில்
மீளாத்துயில் கொண்டாயம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்புண்டேல் அனைவருக்கும் இறப்புண்டு. இது இயற்கையின் நியதி. அதை எண்ணி ஆறுதல் அடைய எண்ணுகிறோம். உங்கள் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**பிரிவின் துயரில் வாடும்**
**சித்தா, சித்தப்பா**
**ஜெனகன் குடும்பம்**
**லோகன் குடும்பம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பில் நீ அன்னை

அன்பில் நீ அன்னை
பண்பில் நீ நிகரற்றவள்
புன்னகையில் நீ குழந்தை
தோற்றத்தில் நீ எளிமை

அகவை முப்பத் தொன்பதில்
ஆறாத் துயரில் எமை ஆழ்த்தி
ஆண்டவன் உன்னை
அழைப்பதற்கு அவசரம் என்ன

நீ வாழ்ந்தது கொஞ்சமே
ஆனாலும்,

வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தாய் - திவ்யா
தோன்றிற் புகழோடு தோன்றினாய் - உன்
ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்

சாந்தி! சாந்தி! சாந்தி!

**அத்தை குடும்பம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரிஸ் சித்தப்பா சித்தியின் இரங்கல்

எம் செல்லக்குட்டி திவ்யாவிற்கு இரங்கலுரையா?
நான் திரும்பி வருவேன் சித்தப்பா என்றாய்?
நாம் காத்திருக்கின்றோம்.
ஆனால் எமது
நினைவு கனவாய் போகும் என்று ஒரு
நிமிடம் கூட நினைக்கவில்லையே...
உன் மனவலிமை நாம் உன்னிடம் கற்ற பாடம்.
நீ எம்முடன் சிரித்து சிரித்துக்
கதைக்கும் போது இது இன்னும் கொஞ்ச நாள்
தான் என்று நினைக்கவில்லையே திவ்யா! எம்
மனதாலேயே உன் நிரந்தர பிரிவை தாங்க
முடியாத போது நாம் யாருக்கு ஆறுதல் சொல்ல
உன் இரு செல்லக்குட்டிகள், உன் அன்பு
கணவர், அப்பா, அம்மா, சகோதரர்கள்,
உறவுகள் அனைவருக்கும் ஆறுதல் கிடைக்கவும்
உங்கள் ஆத்மா சாந்திக்காகவும் தினம் தினம்
பிரார்த்திக்கின்றோம்.
வலிகளை தாங்குங்கள்
வாழ்க்கை அழகாகும் என்று சொல்லாமல்
சொல்லி சென்று விட்டாயே திவ்யா.
உந்தன் குரல் எம் வீட்டில் ஒலித்தபடிதான் இருக்கின்றது.
நீ எம்முடன் இல்லாவிட்டாலும் என்றும்
உன் நினைவு எம் ஆயுள் வரை வாழும்.
உன் பிரிவால் துயருறும்.

**சித்தப்பா சின்ராஸ்,**
**சித்தி வசந்தா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் உயிர்த்தோழி திவ்யா!

எங்கே போனாயடி? எம்கண்கள் உனைத் தேடுதடி.. உன் பிரிவு நெஞ்சைக் கொல்லுதடி... தொலைதூரம் சென்றாயோ? எம் அழுகுரல் கேட்கலையோ? உன் இறப்பு உலகை திரும்பி பார்க்க வைத்தடி.

நம் சொந்தங்களின் நட்புறவால் எம் நட்பு உருவானது. படிக்கின்ற கால முடிவில் இணைந்தாலும் ஏழு வருடங்கள் ஒன்றாக இருந்து பழகிய நாட்கள் தான் எமக்கு வசந்தகாலமடி. எங்கு போவதென்றாலும் என்னோடு நீயிருப்பாய். நீ வந்தால் மட்டுமே நானும் போவேன்.

ஆனால்! காலத்தின் விதிவசத்தால் நாம் கடல் கடந்து வேறு வேறு திசைகளாக வாழ நேர்ந்தது. காலங்கள் பிரிக்கலாம் நம்மை, இடங்கள் நம்மை இடமாற்றலாம். ஆனால் நம் நட்பின் ஆழத்தை யாராலும் பிரிக்க முடியாதடி. தொலைவில் இருப்பது தெரியாமல் நாள்தோறும் முகம் பார்த்து பேசி வந்தோம் Viber மூலமாக. நம் நட்பு மட்டுமன்றி நம் பிள்ளைகளும் நண்பர்களாக அவர்கள் நட்பைத் தொடர வேண்டுமென்று Phone இல் கதைக்க விட்டு அவர்கள் அருகில் நாம் இருந்து அதை ரசித்தோமே...

எங்கிருந்தோ வந்த புயல் எமக்கு சதியாகும் என்று அன்று தெரியவில்லை.

எனக்கு phone எடுத்து கூறினாயே சிகிச்சை நாள் நெருங்கி விட்டது. வருவாயா எனைப் பார்க்க என்று. ஐயோ! அன்று தெரியவில்லை இப்படி ஆகுமென்று. நீ வாவென்று அழைத்தால் நான் உங்கு வருவேன் என்று சொன்னேனடி. ஆனால் இறைவனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவிளையாட்டில் நாமிருவரும் சிக்கிவிட்டோம். நீ வருத்தமின்றி சுகமாக வாழ்ந்திடுவாய் என்று மட்டும் நினைத்தேனே தவிர துளி கூட எண்ணவில்லை விபரீதம் ஆகும் என்று.

இது விதியின் விளையாட்டா? வைத்தியரின் விளையாட்டா? எதுவுமே புரியவில்லை பைத்தியம் தான் பிடிக்குதடி.

எதுவாக இருந்தாலும் உடைத்தெறிந்து வந்திருப்பாய் - எமக்காக இல்லையென்றாலும் உன் குழந்தைகளுக்காக...

ஆனால்! நீ என்ன செய்வாயடி... மயக்கத்தை கொடுத்து உன்னை நினைவிழக்க வைத்தார்களா? அந்தப் பாவி வைத்தியர்கள். அவர்களுக்கு எங்கு புரியும் என் வேதனை.

உன் துணிச்சல் யாரிடமும் இல்லை, உன் மன தைரியம், எதையும் தாங்கும் இதயம், எல்லோர் மீது நீ வைத்திருந்த அன்பு, இவையெல்லாவற்றையும் விட மன்னிக்கும் பண்பு எல்லாவற்றையும் சுக்குநூறாக்கிவிட்டார்களே. ஆனால் உன் நம்பிக்கை உன் குடும்பத்தை வாழவைக்கும். நீ கடவுளின் அவதாரம் உன்னோடு வாழ்ந்த காலங்கள் எனக்கு சொர்க்கமடி.

எனக்கு நீ கடவுள். இதைவிட வேறு சொல் எனக்கு சொல்லத் தெரியவில்லை. உன் நினைவுகளை எழுத இந்த யுகம் போதாது... உன்னிழப்பை எவராலும் நிரப்ப முடியாது... இனிவரும் காலங்கள் உன் நினைவில் வாழ்வோம். சொல்லாமல் போனதினால் பதில் கூற விரைவில் வருவாய் என்று என்மனம் சொல்கிறது. வரும் நாள் எதுவென்று காத்திருப்பேன்... உனக்காக திவ்யா!

**ஆருயிர்த்தோழி**
**ஸ்ரீ கிரிஜா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈசன் உவக்கும் இன்மலர்

பூவுலகில் பிறந்தோம் - வாழ்ந்தோம் - இறந்தோம் என பல்லாயிரக்கணக்கான மக்கள், வாழ்ந்து மடியும் நடப்புலகில், மக்கள் மனதில் சாகாவரம் பெற்று இன்றும் என்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் சாதனையாளர் பட்டியலில் நீங்கா இடம் பெற்ற பெண்மலராம் - பொன்மலர் எங்கள் திவ்யா.

நீ இன்னும் இன்னும் சாதிப்பாய், எங்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்வாய் என, எம் சந்ததியினருக்கு உன்னை உதாரணங்காட்டி மகிழ்ந்த எம்மைத் தவிக்கவிட்டு, ஆறாத்துயரில் மூழ்கவிட்டு இறைவனை நாடிச் சென்று விட்டாயம்மா? ஏன்? விடை கிடைக்கமுடியாத கேள்வி!

ஆரம்பக் கல்வியின்போது படிப்பு மாத்திரமா? - சகல கலைகள், விளையாட்டு என எல்லாத்துறைகளிலும் உன் அபாரத்திறமையைக் காட்டி ஆசிரியர்கள் அனைவரதும் ஆசியைப் பெற்றதுடன் இடையில் நோய் வந்து தாக்கியபோதும், வீரமங்கையாக அதையும் வென்று – பல்கலை சென்று, படிப்பில் சாதனை படைத்து – செய் தொழிலிலும் சிறுபிராயத்திலேயே கௌரவமான அந்தஸ்த்தைப் பெற்று – பெற்றோர், உற்றோரை சபைதனில் முன்னிருக்கச் செய்த மங்கையர் திலகம்.

மனிதநேயங்கொண்ட ஒருசில மக்களில், - முதலிடம் வகிக்கும் குணத்தால் எல்லோரது அன்புக்கும் பாத்திரமாக விளங்கிய எங்கள் தங்கை – எங்களிடையே இப்பொழுதும் வாழ்ந்து கொண்டிருக்கிறாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பொய் அல்ல. நிஜம். உன்னை, உனது வாழ்வை உதாரணமாகக்கொண்டு உன்வாரிசுகள் - உன் கனவுகளை நிறைவேற்றி – உன் ஆத்மாவை மகிழ்விப்பார்கள் என்ற திடநம்பிக்கை எமக்கு உண்டு.

அன்புக் கணவர், பாசக்குழந்தைகள், தவிக்கும் பெற்றோர் மற்றும் உற்றாரின் துயருக்கு காலம் மருந்தாக வேண்டுமென இறைவனை மன்றாடி – உன் ஆத்மா சாந்திக்காகப் பிராத்திக்கும்.

**அண்ணா, அண்ணி குடும்பத்தினர்**
**(செ.செல்வரத்தினம் - கோப்பாய்)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திவ்யா சுதாகரன் நினைவலைகள்

விக்கினேஸ்வரலிங்கம் வல்லிபுரம் ஞானமணி தம்பதிகளின் இல்லற வாழ்வின் தவப்பயனாக திவ்யா பூவுலகில் 16.06.1979 பிறந்தார். எங்களுடன் வாழ்ந்து 18.05.2018ல் இவ்வுலகைவிட்டு பிரிந்த துயர செய்தியை உறவினர் மூலம் அறிந்தோம். மண்ணில் பிறந்த நாம் துயரம் அடைவதைவிட எம்மால் இறப்பை நிறுத்தி விடமுடியாது என்பது இறை நியதியாகும்.

அவரது வாழ்க்கை பாதையில் ஆரம்ப காலத்தை பெற்றோருடன் பிறந்த மண்ணிலும் இடைக்காலத்தை பெற்றோருடன் கொழும்பு மாநகரிலும் இறுதிக்காலத்தை அவுஸ்திரேலியாவிலும் வாழ்ந்து இயற்கை எய்தினார்.

இளமைப் பருவத்திலும் சரி இறுதி நேரத்திலும் சரி தனது கனிவான சொல்லாற்றல், உறவினருடன் பழகும் தன்மையால் எல்லோரையும் கவரக்கூடிய இடத்தை பிடித்திருந்தார். 13வது வயதில் பாரிய நோயினால் பாதிக்கப்பட்டு சத்திரசிகிச்சைக்கு உட்பட்டு தேறியவர். அவரது உடல் நோயினால் துன்பப்பட்டாலும் தனது உள்ளத்தைத் திடப்படுத்தி கல்வியில் சிறந்து விளங்கி கொழும்பு பல்கலைக்கழக பட்டதாரியாக B.com பட்டம் பெற்று இலங்கையின் தலை சிறந்த அரச வங்கியான இலங்கை வங்கியில் உத்தியோகத் தராகப் பணியாற்றியவர். சித்திர வேலவருடைய தொண்டராவார். ஆலய விழாக்கள் தொடர்பான போட்டிகள், நிகழ்வுகளில் தனது இளமை பருவத்தில் பங்கு பற்றி நல்ல பெறுபேறுகளைப் பெற்றவர்.

வரணியூரைச் சேர்ந்த சுதாகரனை மணமுடித்து இரண்டு ஆண் மழலைச் செல்வங்களைப் பெற்று அம்மா என்ற பாக்கியத்தை பெற்றார்.

எமது குடும்ப உறவு - சிறுபராயம், அயல்வீடு ஐயா மாமி, அக்கா, அண்ணா, அண்ணி உறவுகள் பலப்படும்படி கொழும்பிலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்து வந்தாலும் எம்மை காண தவறமாட்டார்கள். 2017ஆம் ஆண்டு இறுதி வருகையை எண்ணிப் பார்க்கின்றேன். திருவெம்பாவை பூசையில் தந்தையுடனும் தனது பிள்ளைகளுடனும் உதய பூசையில் வேலவரை தரிசித்தமை, திருவெம்பாவை ஓதியமை எண்ணிப்பார்க்கின்றேன்.

இடைநிலை, மேலதிக கல்வியை எமது வீட்டிலும், அயல் உறவினர் வீடுகளிலும் நடாத்தப்பட்ட கல்வி கழகத்திலும் கற்று தலை சிறந்த மாணவியாக விளங்கி கற்பித்த ஆசிரியர்களின் நன்மதிப்பையும் பெற்றார்.

இவரது குடும்ப அங்கத்தவர்கள் தாய் தந்தையர், சகோதர சகோதரிகள் குடும்ப பொறுப்பிற்கு அப்பால் சமூகப் பணிகளில் ஆலய பணிகளில் கல்விப் பணிகளில் இன்று பங்குபற்றி வருவது மறப்பதற்கில்லை. சகோதரி குடும்பத்தாரின் முயற்சியால் அமெரிக்கா வாழ் அன்பு நெறி நிறுவனம் பாலர் பகல் விடுதி வளர்ச்சிக்கு உதவி வருவது குறிப்பிடத்தக்கது. தமக்கென மட்டும் வாழாது பிறர்க்கும் உதவியர்களாக வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறான குடும்பத்தை சேர்ந்த திவ்யா சுதாகரன் உடல் நோயினால் துன்புற்று இவ்வுலக வாழ்வை விட்டு இறையடி சேர்ந்தாலும் பிறப்பு, இறப்பு என்ற இடைவெளிகளில் ஊரவர்கள் உறவினர்கள் மனதில் தனக்கென இடத்தை பெற்றுள்ளார்.

இவரது ஆத்மா எல்லாம் வல்ல சித்திர வேலாயுதப் பெருமானை பாதார விந்தங்களை அடையவும் தாயை இழந்த பிள்ளைகள் மனைவியை இழந்த கணவன் பிள்ளையை இழந்த பெற்றோர் சகோதர்கள் நல் வாழ்வு பெற பிரார்த்தித்து நிறைவு செய்கின்றேன்.

**தலைவர்**
**ஐ.சிவலோகநாதன்**
**சமூக சேவா சங்கம்**
**அந்திய கால சங்கம் சார்பில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையருள் ஞானம் பெற்ற நங்கை நல்லாள் திருமதி திவ்யா சுதாகரன்

சின்னஞ்சிறிய சிட்டுக்குருவியாக மகிழ்வோடு எப்பொழுதும் சிரித்த முகத் தோடு சுறுசுறுப்பான சிறுமியாக கோப்பாய் வடக்கு கலம்பரையில் வளர்ந்து வந்த சிறுமி. கடவுள் வழிபாட்டிலும் ஆலய தரிசனத்திலும் திருமுறைகள் படிப்பதிலும் தன்னை ஈடுபடுத்தி ஆன்மீக பலம் பெற்று வந்த சிறுமி. துடுக்கான கதைகளாலும் உரையாடல் களாலும் எல்லோரையும் கவரும் உறுதியான உளப்பாங்கும் கொண்டு வளர்ந்த சிறுமி.

கள்ளங் கபடமற்ற தெள்ளத் தெளிந்த உள்ளத்தில் கல்வியும் தழைத் தோங்கி வளர உயர் கல்வியும் பட்டங்களும் பெற்றுத் தேறிய மங்கையானார் திவ்யா விக்னேஸ்வரன் அவர்கள்.

நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகமெனும் அறம் போற்றி உன்னத குடும்பமாக விளைந்த விக்னேஸ்வரலிங்கம் ஞானமணி தம்பதிகளின் குடும்பச் சுனையில் ஓர் கலச நீர் செல்வி திவ்யா அவர்கள்.

பெற்றோரின் பேரன்பிலும், சோதர மற்றும் உற்றோர் உறவினதும் அன்பு ஆசிகள் பெருகப் பெருக வளர்ந்து வங்கித் தொழில் புரிந்து மகிழ்ந்தார் திவ்யா மங்கை.

பெற்றோர் உற்றோரின் பேராசியோடு, வரணி மைந்தன் சுதாகரனை மணமகனாக கரம்பற்றி இன்புற, இறை திருவருளும் ஆசியும் ஈடேற்றம் பெற்று திருமதி திவ்யா ஆனார்.

இல்லற தர்மத்தில் அருளோடும் அறிவோடும் திருவோடும் மகிழ்ந்த வாழ்ந்த திவ்வியா அருமைச் செல்வங்களாக அத்சயன், கேசிகன் ஆகிய இரு ஆண் குழந்தைகளைப் பெற்று மகிழ்ந்தார் திவ்யா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென் கண்டச் சிறுபூமி வளம் கொழிக்கும் அவுஸ்திரேலியாவில் குடும்பத் துடன் குடியேறி வாழ்ந்தார் திவ்யா அவர்கள். எனினும் தன் தாய் மண் கோப்பாயையும் தன் வழிபடு இஷ்ட தெய்வமாகிய வட கோவை ஸ்ரீ சித்திரவேலாயுதப் பெருமானையும் அன்புருக நேசித்து, தாய் மண்ணின் உறவுகளையும் தரிசிக்கவும், கொழும்பு மாநகர மண்ணில் வாழ்ந்த போது பெற்ற இறை ஆலய உறவுகளையும் அன்புள்ளங்களையும் தரிசிக்க தாய்நாட்டை பலமுறை தரிசித்து தானும் இன்புற்று அனைவரையும் மகிழ்வித்தார் குடும்பத்தின் குலவிளக்குத் தாயான திவ்யா அவர்கள்.

39 அகவைகள் இவ்வுலகில் வாழ்ந்தது போதும் வருக என் கழலடிக்கு என்பது இறைவனால் அவருக்கு ஏற்கெனவே இடப்பட்ட பிராரத்துவமோ தெரியவில்லை. அவரது இருதயம் பலம் குன்றியது. ஆரோக்கிய பலம் நெகிழ்வடையத் தொடங்கியது. குடும்பமும் மருத்துவ சேவையும் அவரது உயிரைத் தக்க வைப்பதற்காக அவுஸ்திரே லியாவில் இறைவனை வேண்டி போராடினார்கள். அன்புள்ளங் கள் கலங்கிப் பதைபதைத்தன. திவ்யா மருத்துவமனையில் அமைதியாக உறங்கி இவ்வுலகிலிருந்து மெதுமெதுவாக விடைபெற்றுக் கொண்டிருந்தார் என்பதை எவராலும் உணர முடியவில்லை. அதனை ஏற்றுக் கொள்ள முடியாத இரத்த பாசங்களும் உறவுகளும் கதிகலங்கின. பெற்ற தெய்வங்கள், துணைவர், குழந்தைகள், சகோதரர்கள் நிலை தடுமாறினர். அவர்களுக்கு துன்பம் தொண்டையை அடைத்தது. உடல் கனத்துத் தளர்ந்தது. கண்கள் நீரால் நிறைந்தன. ஆயினும் திவ்யாவின் உயிர் 18.05.2018 அன்று இவ்வுலகைப் பிரிந்து விடை பெற்றது. செய்தியை அறிந்த அன்புறவுகள் சோகத்தில் மூழ்கித் திளைத்தன. வார்த்தைகள் மௌனித்தன. திவ்யாவின் இறுதிக் கிரியைகள் சோகத்தில் நடந்தேறின.

துயரத்திலும் நாட்கள் நகர்ந்து திங்கள் ஒன்றரையாகியது. மனங்கள் சாந்தியடைய வேண்டியதை வலியுறுத்தும் ஆத்ம சாந்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரியைகள், சபண்டீகரணம் நடைபெறுகின்றது. குறைந்த வயதிலும் நிறைந்த வாழ்வியல் ஞானம் பெற்ற திவ்யாவின் புனித ஆன்மா அவரது குழந்தைகளை ஞான புருசர்களாக நிர்மாணிப்பதைத் தன் தாரக மந்திரமாக்கி இறைவனிடம் வேண்டும். அதற்காக துணைவரும் பெற்றோர்களும் பக்க பலமாக நலம்பெற்று கடமையாற்ற வேண்டும் என இறைவனை இறைஞ்சும். தன் அன்புறவுக்குரிய நெஞ்சங்களும் மனஅமைதியோடு வாழவேண்டும் என இறைபாதம் அடைந்து ஆத்ம வேண்டுதல் செய்யும். அத்துணை ஆன்மா இறை பாதங்களில் ஆன்ம ஈடேற்றம் பெற்று குடும்பத்திற்கும் உறவுகளுக்கும் ஒளிபரப்பி வழிகாட்ட வேண்டும் என ஸ்ரீ சித்திரவேலாயுத பெருமானை வேண்டிப் பிரார்த்திக்கிறோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

திருச்சிற்றம்பலம்

மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து உன் விரையார் கழற்குஎன்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்து உன்னைப் போற்றி சயசய போற்றி என்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய் என்னைக் கண்டு கொள்ளே!

திருச்சிற்றம்பலம்

**த.தர்மராஜா**
முன்னாள் தலைவர்,
ஆலய தருமபரிபாலன சபை
வட கோவை ஸ்ரீ சித்திர வேலாயுதசுவாமி கோவில்,
கோப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகன் துணை

*''சொற்றுணை வேதியன் சோதி வானவன்*
*பொற்றுனை திருந்தடி பொருந்தக் கைதொழ*
*கற்றுணை பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்*
*நற்றுனை யாவதும் நமச்சிவாயவே.*

''நாதன் நாமம் நமச்சிவாயவே'' என்று நாம் கூறுவது பொய் ஆகாது. விக்னேஸ்வரலிங்கத்திற்கும், ஞானமணிக்கும் நான்காவது மகளாக திவ்யா அவதரித்தார். அவர் தனது கல்வி கேள்விகளில் உயர்வுபெற்றார் என்பதில் வேறு கருத்திற்கிடமில்லை. அவர் பல்கலைக்கழக பட்டதாரியாகினார். வங்கிச் சேவையில் மிகச் சிறப்பாக சேவையாற்றினார். இவர் திரைகடலோடியும் திரவியந்தேடு என்ற ஆன்றோர் வாக்கிற்கிணங்க அவுஸ்திரேலியா சென்றார்.

முகங்கள் பன்னிரண்டும் கொண்டு ஒரு திருமுருகன் அருள்பாலித்தார் என்பது உண்மையே. திவ்யா கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலையில் நடைபெற்ற திருக்குறள் சம்பந்தமான விழாவில் திருக்குறள் சார்பான வில்லிசையாற்றி மக்கள் மனதில் இடம்பிடித்தார் என்பதில் மாறுபாடான கருத்து இல்லை. அவர் நிகழ்த்திய வில்லிசையில் வேறும் பலர் பங்கேற்றனர். வில்லிசை நிகழ்வு இன்றும் எங்கள் காதுகளில் ஒலித்துக்கொண்டு இருப்பதை நாம் அறிவோம்.

ஒளிமயமான எதிர்காலத்தை எண்ணி இவரது தந்தை, தாயார் திருமண பந்தத்தில் இவரை இணைத்தனர். இவரது துணைவராக திரு.சுதாகரனை அவர்கள் இணைத்து வைத்தனர். அணையா விளக்காக ஒளி கொடுப்பார்கள் என எண்ணினர். வாழ்க்கை என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நீர்க்குமிழிக்குச் சமமானது என்பதைத் தற்காலிகமாக மறந்து அவர்கள் ஏற்றிய ஒளி நீண்டகாலம் துணை நிற்கவில்லை. இவர்கள் ஏற்றி வைத்த ஒளி நீண்ட பயனளிக்கவில்லை.

திவ்யா இரு புதல்வர்களை விட்டுச் சென்றுள்ளார். சுதாகரனும் திவ்யாவும் தாம் பெற்றெடுத்த குழந்தைகள் இருவருக்கும் அத்சயன், கேசிகன் என பெயரிட்டு வளர்த்து வரும் வேளை தாயானவள் தன் துணையை விட்டு, தனது இரு குழந்தைகளையும் விட்டு விலகி விட்டார். இவையாவும் இயற்கையின் விளைவே.

வாழ்க்கை என்பது சிறுநாடகம். நாடக முடிவில் ஒவ்வொருவரும் தமது பாத்திரங்களை நடித்து முடித்ததும் மேடையை விட்டு இறங்குவது இயல்பே. அதேபோல் திவ்யா என்ற நடிகையும் நடிப்பு முடிந்ததும் வாழ்க்கை மேடையினின்று நிரந்தரமாக நீங்கி விட்டார். அவர்களின் விலகலினால் கவலை கொள்வதில் பயனேது? இருந்தாலும் அவர் விட்டுச் சென்ற குழந்தைகளை மேலான நிலைக்குக் கொண்டு வருவதே நலம்.

திவ்யாவின் ஆத்மா சாந்தியடைய நாமனைவரும் பிரார்த்திப்போம். ''நமச்சிவாய'' என்ற நாமத்தை நாமும் ஜெபிப்போம்.

**திரு. திருமதி. திருச்செல்வம்**
**கோப்பாய் மத்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன் சொல்லாள்

யாழ்பாணக் குடாநாட்டின் வலிகிழக்குப் பகுதியில் அமைந்தது கோப்பாய்க் கிராமம். இது நிலம், நீர், அருள், கல்வி வளம் என்பனவற்றில் சிறந்து விளங்குகிறது. அது மட்டுமல்ல வரலாற்று பெருமையும் கொண்டது. இக்கிராமத்தில் ஆங்கிலேயர்கள் காலத்தில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி நிறுவப்பட்டது. இதன் எதிர் ஒலியாக கிராமத்து சைவப் பெரியார்களால் சைவப்பாடசாலைகளும் நிறுவப்பட்டன. ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்காக ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் எமது நாட்டில் நிறுவப்பட்டுள்ளன. அதில் இரண்டு பயிற்சி கல்லூரிகள் எமது கிராமத்தில் நிறுவப்பட்டுள்ளன.

இத்தகைய வளம் பொருந்திய கிராமத்தில் இல்வாழ்க்கையின் இலக்கணமாக வாழ்பவர்கள் விக்னேஸ்வரலிங்கம் - ஞானமணி தம்பதியினர். இல்வாழ்வின் இனிய பேறாக இவர்களுக்கு கிடைத்த கனிஸ்ட புதல்வி திவ்யா ஆவார். திவ்யா சிறு குழந்தையில் மிகவும் துடுதுடுப்பானவர். எல்லாருடனும் அன்பாகப் பழகுவார். சிறு பிள்ளைகள இவரை தேடி விளையாட வருவார்கள். கல்வி கற்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டு காணப்பட்டார். இதனால் தந்தையும் தனது புதல்வியை கல்வி – வேள்விகளில் சிறக்க வைக்க விரும்பினார்.

"தந்தை மகற்கு ஆற்றும் உதவி
அவையத்து முந்தியிருப்பச் செயல்"

இந்த வள்ளுவர் வாக்கிற்கு அமைவாக தனது புதல்வியை சைவப் பாடசாலையான கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியைப் பெறுவதற்காக இணைத்துக் கொண்டார். அவர் விளையாட்டு, ஆடல், பாடல்களில் சிறந்து விளங்கினார். அதற்கு காரணமாக அமைந்தவர் அவரின் தாயார். திவ்யாவின் தாயார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்பாட்டு, வயலின் ஆகிய இரு துறைகளிலும் வல்லவர். அவர் ஒரு இசை ஆசிரியராவார். இதனால் சிறந்த முறையில் கற்பித்தார். தந்தையாரும் அவரது கல்விக்கு உறுதுணையாக இருந்தார்.

இடைநிலைக் கல்வியை யாழ் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மற்றும் பம்பலப்பிட்டி, சென்மேரிஸ் கல்லூரியிலும் பயின்றார். உயர்தர வகுப்பை கொழும்பு இராமநாதன் இந்துமகளிர் கல்லூரியில் பயின்றார். பல்கலைக்கழகத்திற்கு வர்த்தகத்துறைக் காகத் தெரிவு செய்யப்பட்டார். இதனால் B.Com பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து அவர் CIMA பரீட்சைக்கு தோற்றி வெற்றியும் பெற்றார். (வர்த்தக துறையை தனது உயர் கல்விக்காக தெரிவு செய்தார்) இதனால் தான் கற்ற கல்வியை பயன்படுத்த கூடிய வங்கித் தொழிலில் தன்னை இணைத்துக் கொண்டார்.

இவ்வாறு கல்வி கற்று வேலை செய்யும் மகளை இல்வாழ்க்கை யில் இணைக்க விரும்பிய பெற்றோர் சுதாகரன் என்பவரை மணமகனாக்கி வைத்து மணக்கோலம் பார்த்தனர். கணவனுக்கு ஏற்ற மனைவியாக வாழ்ந்த பெருமை திவ்யாவிற்கு உரியது. யாவருடனும் அன்பாக பேசுவார். யாவரையும் சிறந்த முறையில் உபசரிப்பார். அவரின் பேச்சு மிகவும் இனிமையானது.

சிறுவயதில் கோப்பாய் சித்திர வேலாயுத சுவாமி கோவிலால் நடாத்தப்படும் போட்டிகளில் பங்கேற்று பரிசில்களைப் பெற்றவர். ஸ்ரீராம ஜெயம் என்ற மந்திரத்தை உபாசகம் செய்பவர். பாரதி கண்ட புதுமைப் பெண்ணாகத் திகழ்ந்தவர். தான் கற்ற கல்வியில் தன்னார்வம் உடையவராகத் திகழ்ந்தார். தனது பிள்ளைகள், கணவன், பெற்றோர், சகோதரர், உறவினர், நண்பர்கள் யாவருடனும் மிகுந்த அன்பாகப் பழகுவார். அவரது ஆத்மா உடலை விட்டுப் பிரிந்துள்ளது. அவரின் அன்பான வார்த்தைகள் அனைவாரலும் மறக்க முடியாதவை. பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக பார் எல்லாம் வலம் வருகிறாள்.

**ஆசிரியர் - ஓய்வுநிலை**
**க. மனோன்மணி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THIVYA

It is an honor to write this tribute to our beloved Thivya – a dear friend, colleague, sister, and daughter – in whatever role we knew her. We first met her as she was transferred to Bank of Ceylon Milagiriya in year 2010. Her special leadership abilities and personality were readily apparent as an outstanding Executive Officer. This first encounter marked the beginning of a longstanding friendship with Thviya.

She always found time for her friends and made sure to extend her friendship with the rest of their family members as well. She was a strong and caring person who never lied nor got angry even with the people who did her wrong. These attitudes made us honor her. Although much too short, her life was well lived.

Thivya was an extra-ordinary person and will be missed by many but never forgotten by us who were fortunate enough to have known her.

Though she was away in Australia, she kept in regular contact with her friends and whenever she visited Sri Lanka she never failed to give a token in remembrance.

She leaves behind her sorrowing husband and two kids and we pray that God should console and comfort them.

Sadly missed and affectionately remembered by her friends of Bank of Ceylon Milagiriya Branch (Year 2010-2014).

**Bank of Ceylon Milagiriya Branch**
**(Year 2010-2014)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நண்பர்களின் இரங்கல்

அன்பு மொழி பேசும் அன்பு தோழியே!
உன் திருநாமம் திவ்யா எனினும்
எம்மால் "ஜம்மி" என்று செல்லமாய் அழைக்கப்பட்டாய்

பாசம் நிறைந்தவளாய் பண்பு மிகுந்தவளாய் அனைவருடன் நேசமாய் பழகி,பல கதை பேசி சிரித்து நிற்கும் கோலம் என்றும் நிறைந்திருக்க. உதவி என்று கேட்டவுடன் ஓடிவந்து நீ செய்யும் செயல்கள் எங்கள் நினைவில் நிறைந்திருக்க. அடுத்து வந்த செய்தியோ எங்கள் ஆழ் மனத்தை ஆட்டி அசைத்து விட்டது.

வசந்தமான பல்கலைக்கழக வாழ்வு தொடக்கம் எங்களுடன் ஆழமாய் அன்பு செலுத்திய எங்கள் அன்பு தோழி எம்மையும் இந்த மண்ணையும் விட்டு விண்ணுலகம் சென்றாய் என்று..

நீ இறுதியாக காணும் போதும் பேசும் போதும் ஏன் சொல்லவில்லை எம்முயிர் தோழியே எங்களை மீண்டும் காணமாட்டோம் என்று ?

இவ்வுலகம் உள்ளவரை நட்சத்திரமாய் திகழ்ந்து உன் குடும்பத்தை என்றும் ஆசிர்வதிப்பாய்.

எங்கள் உள்ளத்தில் ஜீவனாய் கலந்து நினைவுகளின் வலிகளால் விழிகளில் சுமந்த கண்ணீரை உன் அன்பு நட்புக்கு பூக்களாக தூவி காணிக்கையாக்கி உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிராத்திக்கின்றோம்.

**நண்பர்கள்**
**கொழும்பு பல்கலைக்கழகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

N.R. WICKIRAMASINGHAM C.M.C.J.P
HONOURARY JUSTICE

P.O.BOX 2284
DANDENONG
VICTORIA 3175
AUSTRALIA

34 JAMES STREET
DANDENONG
VICTORIA 3175
AUSTRALIA
TELE : (03) 9794 7942
MOB : 0404 059 231

# அவுஸ்ரேலிய தமிழ் மக்களின் உள்ளங் கவர்ந்த திருமதி திவ்யா சுதாகரன்

இலங்கையில் யாழ் வட கோப்பாயில் திரு.திருமதி விக்னேஸ்வரலிங்கம் ஞானமணி அவர்களின் கனிஷ்ட புதல்வியாக திரு. கேதிஸ்வரன், திரு. பிரதிஸ்வரன், திருமதி. சந்தியா, திரு. லிங்கேஸ்வரன் ஆகியோரது உடன் பிறப்புக்களாக, பிறந்து வட கோப்பாய் சரவணபவானந்தா, வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை, கொழும்பு சென்மேரிஸ் கல்லூரி, இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி மற்றும் பல்கலைக்கழகம் வரை கற்று, பட்டதாரியாகி இலங்கை வங்கியில் முகாமைத்துவப் பதவி வகித்து, வரணியூர் தம்பையா கமலாம்பிகை அவர்களின் அருமைப் புதல்வர் திரு சுதாகரன் அவர்களை திருமணம் செய்து ஓர் இனிய பண்பான குடும்பமாக இல்வாழ்வில் புகுந்த திவ்யா 2008 ஆம் ஆண்டு திருநிறைச் செல்வன் அத்சயன் அவர்களை பெற்றெடுத்த தாயானார். 2011ஆம் ஆண்டு அவுஸ்ரேலிய குடியேற்ற வாசியாக மெல்போர்னில் தமது வாழ்க்கையை ஆரம்பித்த இவர்களுக்கு அன்பாலுருவான செல்வன் கேசிகன் கனிஸ்ட புதல்வனாக பிறந்தார்.

திருமதி திவ்யா சுதாகரன் அவர்கள் மொழிப்பற்று, கலை, கலாச்சாரம் என்பவற்றில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இந்த குறுகிய கால அவுஸ்ரேலிய வாழ்க்கையில் இவரது சாதனைகள் பல!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பின் வழியது உயரி நிலை என்ற வள்ளுவர் கூற்றை கடைப் பிடித்தவர். வாழ்வின் பண்பே அன்பு, வாழ்வின் பயனே அறம் என்று வரையறுத்து வாழ்ந்தவர் தான் திவ்யா. சமூக, கலை, கலாச்சார நிகழ்வுகளை இன்முகத்துடன் வரவேற்று இங்கு பிறந்து வாழும் சிறுவர் சிறுமியர்களையும் தன் குழந்தைகள் போல் ஊக்கிவிக்க தவற மாட்டார். அத்துடன் தனது பங்களிப்பை வழங்க தவறுவதில்லை.

MONASH மருத்துவ மனையில் INCENTIVE CARE UNIT இல் சிகிச்சை பெற்ற ஒன்பது நாட்களில் திவ்யாவின் நிலை அறிந்து பிரார்த்தனைகளில் ஈடுபட்டவர்கள், வருகை தந்தவர்கள் நூற்றுக்கணக்கானோர், இறுதிக்கிரிகைகளில் பங்கு கொண்ட மக்கள் அனைவருமே திவ்யாவின் அன்பாலும் பண்பாலும் கவரப்பட்டவர்கள்.

அவுஸ்திரேலிய மெல்பேர்ன் நகரில் H & R BLOCK ஸ்தாபனத்தில் முகாமைத்துவ கணக்காளராக கடமையாற்றி, தனக்கென ஒரு தனி கௌரவத்தையும், உயர் அதிகாரிகளின் பாராட்டுக்களையும் பெற்ற திவ்யா எம்மைவிட்டு பிரியவில்லை. ஒவ்வொருவர் நெஞ்சங்களிலும் தனது அன்பையும் பண்பையும் நிலை நாட்டி விட்டார் என்பதில் சந்தேகமே இல்லை. திவ்யாவை பிரிந்து வாழும் அன்புக்கணவர் சுதாகரன் அன்புச் செல்வங்கள் அத்சயன், கேசிகன் அப்பா, அம்மா, அண்ணாமார், அக்கா, தம்பி, மாமா, மாமி, மச்சாள்மார் இவர்களின் துயர் நீக்கி சுயவாழ்வுக்குத் திரும்ப இறைவனை வேண்டுவதுடன் இதே வேளையில் உன் அன்பு செல்வங்கள் அத்சயன், கேசிகன் இருவரும் நானிலமும் ஏடும் போற்றும் நற்தமிழ் கல்விமான்களாக பிரகாசிக்க கல்விக்கரசி கலைமகளை வேண்டி நிற்பதுடன் உமது ஆத்மா சாந்திக்காக பிராத்திப்போம்.

**மச்சாள் குடும்பம்**
**திரு. திருமதி.உத்தராதேவி விக்கிரமசிங்கம்**
**திரு. திருமதி. விஜிதா, பிரசாந்தன், தர்ஷணா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PO Box 1357, Clayton South, Vic. 3169, Australia.
Tel.: 1300 933 922, 0433 354401 (Mobile) email: info@bharathi.org.au
www.bharathi.org.au Facebook: Facebook.com/BharathiAcademy

# எங்கள் அன்பான திவ்யா

உன் தணியாத தமிழார்வம்
இன்று தணிந்து போனது.
ஒவ்வொரு தமிழ்க் குழந்தையும்
தமிழ் கற்க வேண்டுமெனக்
கொழுந்து விட்டெரிந்த ஆவல்....
ஒவ்வொரு பிள்ளையையும்
உன் பிள்ளை போல்
கவனிக்கும் பண்பு.....

பாரதி பள்ளி நடை பாதைகளில்
குழந்தைகளை நீ
அன்பாக அரவணைத்து
அழைத்துச் செல்லும் காட்சியை
இனி என்று காண்போம்?
உன்னைக் கண்டதும்
மலரும் மொட்டுகளாய்
புன்முறுவல் பூக்கும்
அத்தனை பிஞ்சு முகங்களும்
இனி யாரைத் தேடும்?

அழைத்த போதெல்லாம் கை கொடுத்தாய்.
உன் சுகவீனத்தின் வலியைக் கூட
மறைத்துக் கொண்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையே கண்ணென
எம்முடன் கை கோர்த்தாய்.

உன் நட்பால் செழுமை பெற்ற,
உன் உதவியால் ஆறுதல் பெற்ற,
பாரதி பள்ளியின் ஆசிரியர்கள்
இனி யாரைத் தேடித் போவர்?

விளையாட்டுப் போட்டியோ,
மழலைகள் விழாவோ,
நாடக ஒத்திகையோ,
எங்குமே நீ நிறைந்து நின்றாய்.

இன்று உன் பிரசன்னத்தை இழந்தோம்.
உன் விழிச் சுடரில் மிதந்து வந்த
அரவணைப்பையும் இழந்தோம்.
நீயில்லாத பாரதி பள்ளியும்,
நீயில்லாத இப்பெரும் உலகும்,
வறுமை உற்றன... வறுமை உற்றன.

உன் தன்னலமற்ற சேவையை,
என்றும் நினைத்திருப்போம்.
உன் பெருமை காக்க
இரு குழந்தைகள்
அன்பான கணவன்
எல்லாம் விட்டு நீ
செல்லத் துணிந்தாலும்,
என்றும் எங்கள்
அருகில் நிலைத்திருப்பாய்.
என்றும் எங்கள்
மனதுக்குள் நிறைந்திருப்பாய்.

**- பாரதி பள்ளி நிர்வாகமும், ஆசிரியர்களும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபாபதி நாவலர்

ஈழத்தில் மட்டுமல்ல தமிழகத்திலும் தமிழை வளர்த்துக் கோப்பாய்க்குப் பெருமை தேடித் தந்தவர் சபாபதி நாவலர் அவர்கள். அவரின் தமிழ் அறிவுப் புலமையினால் அறிஞர்கள், அரசர்கள் ஆகியோரின் நட்பினையும், மதிப்பினையும் சேர்த்துக் கொண்டார்.

வடகோப்பாயில் 'வராம்பற்றை' என்னும் குறிச்சி உள்ளது அங்கு வாழ்ந்த சுயம்புநாதன் - தெய்வானை தம்பதிகளுக்கு 1845 ஆம் ஆண்டு தவப்புதல்வனாகச் சபாபதி நாவலர் அவர்கள் அவதரித்தார்.

தந்தையின் கடமை தமது மைந்தரைக் கல்வி – கேள்விகளில் சிறக்க வைத்தலாகும். இதனால் நாவலரை கோப்பாயைச் சார்ந்த ஜகந்நாத ஐயரிடமும், நீர்வேலி சிவசங்கர பண்டிதரிடமும் அனுப்பி வைத்தார்.

சபாபதி நாவலரின் கல்வியின் சிறப்பினைக் கண்டு, ஆறுமுகநாவலர் அவர்கள் அவரைத் திருவாவடுதுறை ஆதினத்துக்கு அழைத்தார். அங்கு அவரைத் தமிழ் முதன்மை ஆசிரியராக அமர்த்தினார். இதனால் தமிழகம் அதிகப் பயனைப் பெற்றது என அறியக் கிடக்கின்றது.

தமிழைக் கற்றுணர்ந்த சபாபதி நாவலர் அவர்கள் சைவத்தையும் துறைபோகக் கற்றார். கல்வியில் வல்லவராகத் திகழ்ந்தமையால் வாதங்கள் செய்வதிலும் வல்லவராகினார். இதனால் இவருக்குச் 'சுப்பிரமணிய தேசிகர்' மற்றும் 'நாவலர்' ஆகிய பட்டங்களை நல்கினார்.

சபாபதி நாவலர் அவர்கள் தமிழ் அறிஞர் உ. வெ. சுவாமிநாதஐயரின் மதிப்பையும் பெற்றவர். சபாபதி நாவலர் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திராவிடப் பிரகாசிகை' என்னும் நூலினை எழுதி வெளியிட்டுள்ளார். இன்னும் பல தமிழ்- சமய நூல்களையும் எழுதியுள்ளார். அவர் நூல்களை எழுதி வெளியிட்டதுடன் அச்சு இயந்திரசாலை ஒன்றையும் 1899இல் சென்னையில் அமைத்து ''ஞானமிர்தம்' என்னும் பத்திரிகையினையும் ''சைவ சூளாமணி' 'நாவலரேறு' என்னும் விருதுகளையும் தட்டிக் கொண்டார்.

அன்னார் வடகோவையில் அமைந்த செல்வ விநாயகர் மீது 'திருவிரட்டை' மணிமாலையைப் பாடியுள்ளார். புகுந்த இடத்துச் சுழிபுரப் பிள்ளையார் மீதும் பள்ளுப் பாடியுள்ளார் என அறியக் கிடக்கின்றது.

சபாபதி நாவலரின் படைப்பான 'திராவிட பிரகாசிகை' மறுபதிப்புச் செய்யப்பட்டது. அப்பொழுது அதன் சிறப்பினைச் சர்வதேசத்திற்கும் தெரிய வைக்கும் வகையில் அந்நூலிற்கு ஆங்கிலத்தில் முகவுரை எழுத பேராசிரியர் சிவபாத சுந்தரம் இணங்க நாவலர் அவர்களின் வாழ்க்கைச் சரிதம் அவரது மருகனான சிவகுருநாதன் அவர்களால் வெளியிடப்பட்டது. அந்நூலில் நாவலர் அவர்களுக்கு நினைவு மண்டபம் அமைக்க நூலிற்கு வள்ளல்களிடம் பொருள் வேண்டி நின்றார்.

நாவலரின் சேவையை நினைவு கூர்ந்த கோவை வாசிகள் இரண்டு நாட்கள் அவருக்கு இங்கு 1960ஆம் ஆண்டு ஆனி மாதம் 5, 6ஆம் தேதிகளில் விழா எடுத்தனர். கோப்பாய் வடக்கில் செல்வ விநாயகர் ஆலயத்தின் அருகில் அமைந்து இருக்கும் சனசமூக நிலையத்திற்கு அவரின் ஞாபகார்த்தமாக அவரது பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இந்தப் பேரறிவு மிக்க தமிழ் அறிஞரைப் பெற்று கோப்பாய் மக்கள் அவருக்கு ஒரு நினைவு மண்டபம் அமைப்பது, அங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழை வளர்ப்பது காலத்தின் தேவை என எண்ணக் கிடக்கின்றது. அவரது மருகரினது ஆவல் நிறைவேற புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் அதனைச் சிந்தனைக்குக் கொண்டு வர வேண்டும்.

கோப்பாய் என்ற ஊரின் பெயரைக் கூறியதுமே “கோப்பாய் சபாபதி நாவலரின் ஊரா? என்று தமிழ்பேசும் நல்லுலகமே கேட்டு நிற்கச் செய்து கோப்பாயின் புகழுக்கும் பெருமைக்கும் காரணமாக விளங்கியவர் சபாபதி நாவலர் அவர்கள்.

## சபாபதி நாவலர் அவர்களால் எழுதப்பட்ட நூல்கள்

1. சிதம்பரசநாதபுராணம்
2. சிவகர்ணாமிர்தம்
3. சதுர்வேததாத்பரியசங்கிரகம்
4. இராமாயணதாத்பரியசங்கிரகம்
5. யேசுமத சங்கற்ப நிராகரணம்
6. இலக்கண விளக்கப் பதிப்புரை மறுப்பு
7. வைதிக காவிய தூஷண மறுப்பு
8. பராத தாற்பரிய சங்கிரகம்
9. ஞானசூடாமணி
10. ஞானாமிர்தம்
11. திருச்சிற்றம்பலயமகவந்தாதி
12. திருவிடை மருதூர்ப் பதிற்றுப்பந்தாதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. மாவையந்தாதி

14. சிதம்பர பாண்டிய நாயக மும்மணிக்கோவை

15. வடகோவைச் செல்வ விநாயகர் இரட்டை மணிமாலை

16. நல்லைச் சுப்பிரமணியக் கடவுள் பதிகம்

17. வதரி நகர்த் தண்டபாணிக் கடவுள் பதிகம்

18. புறவார் பனங்காட்டுர்ப் புறவம்மைப்பதிகம்

19. சிவஞான யோகிகள் குரு - பூசை மகோற்சவம்

20. திராவிடப் பிரகாசிகை

சபாபதி நாவலர் அவர்கள் சிதம்பரத்தில் இருந்த காலத்தில் 1903 ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவம் தந்த சிவத்தமிழ் செல்வி

சிவபெருமானை முழு முதற்கடவுளாக கொண்டது சைவசமயம். இறைவன் என சிவனை போற்றி வணங்கியவர் காரைக்காலம்மையார். அவர் இறைவனை இயற்கை வடிவிலே கண்டவர். அக்காட்சியை எல்லோரும் என்றும் கண்டு மகிழப் பாடல்களிலே சொல்லோவியமாக வரைந்து வைத்தவர். தமது முன்னோர் வழிபாட்டு மரபைப் பேணி அதைப் பின்னோர் அறிய வைத்தவர்.

அவரை அடுத்து, திலகவதியார் சைவசமயத்தை ஒரு சிறந்த வாழ்வியல் நடைமுறையாகப் பேண வழி காட்டினார். மனித வாழ்க்கையில் இடர்கள் வரும் போது அவற்றைக் களைய கோவில் வழிபாடே உறுதுணையாகும் என உணர்த்தியவர். துன்பத்தால் துவண்டு சைவவழிபாட்டைத் துறந்து பிற சமயங்களைத் தழுவுவோரை நெறிப்படுத்தியவர் திலகவதியார் எனில் மிகையாகாது. தனது தம்பி நாவுக்கரசனை அவ்வாறு மீட்டு வந்து மீண்டும் சைவ வாழ்வியலைத் தொடரச் செய்தவர். காரைக்காலம்மையர் பாடிய தேவாரப்பாடல் மரபை நாவுக்கரசரும் பாடித் தொண்டு செய்ய வைத்தவர்.

திலகவதியாருடைய நெறிப்படுத்தலைச் சிறப்பாக மேற் கொண்டவர் ஈழத்துச் சைவ மரபிலே தோன்றிய செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி. தமிழாசிரியராகப் பணி செய்யும் போது சமய நெறியைக் கற்பிப்பதோடு மட்டும் நின்றுவிடாது அதை வாழ்வியலோடு இணைக்க வேண்டி பணி செய்தவர். இல்லறம் துறந்து திருக்கோயில் பணியிலே முழுமையாக ஈடுபட்டவர். இலுப்பை மரங்களின் இடையே இருந்த துர்க்கையம்மனுக்கு பெருங்கோயில் கட்டி எல்லோரும் அவளை நேரில் வழிபடவகை செய்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோயில் பணியில் திளைத்திருப்பதே நிறைவான சைவ வாழ்வியலென்பதை எல்லோருக்கும் உணர்த்தியவர். துன்பத்தால் நலிந்து துணையின்றி அல்லற்பட்ட பெண்களுக்குத் தெல்லிப்பழை துர்க்காபுரம் ஆறுதல் தரும வாழிடமாக அமையப் பெருமுயற்சி செய்தவர்.

திருக்கோயில் வழிபாட்டில் பெண்களின் பங்கைச் சிறப்பாகத் திட்டமிட்டுச் செயலாற்றியவர். திருக்கோயிலின் பணிகளுக்குப் பொறுப்பாகத் தலைமைத்துவத்தை ஏறக்குறைய நாற்பது ஆண்டுகள் அவர் செய்த பணி சைவ சமய வரலாற்றில் அன்னை சிவத்தமிழச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியாக துர்க்கா துரந்தரியாகப் பதிவு செய்ய வழிசமைத்தது. ஆணின் துறவு வாழ்க்கை தன்னலமானது.

ஆனால் பெண்ணின் துறவு அவள் எல்லோருக்கும் அன்னையாக, உற்ற துணையாக உடனிருக்க வல்லது என்பதை உலகம் அறிய வைத்தவர் சிவத்தமிழ்ச் செல்வி. ஈழத்தில் மட்டும் முடங்கியிருக்காமல் மலேசியா, இந்தியா, சிங்கப்பூர், பிரித்தானியா போன்ற பிற நாடுகளுக்கும் சென்று துர்க்கை அம்மன் திருகோயில் பணிகளுக்கான பொருட் கொடையைப் பெற்றவர்.

அவரது இனிய குரலால், ஆற்று ஓழுக்குப் போன்ற பேச்சால் எல்லோரையும் சைவ வழிபாட்டில் மனங் கொள்ளச் செய்தவர். ஈழத்துத் திருக்கோயில்களில் அவரோடு இணைந்து சமயச் சொற்பொழிவு ஆற்றும் வாய்ப்பு இற்றைக்கு 45 ஆண்டுகளுக்கு முன்னரேயே எனக்கு கிடைத்தது. அப்பணி இன்றுவரை தொடர வழகாட்டி நிற்கிறது.

அன்னை சிவத்தமிழ்ச் செல்வியின் தொலைநோக்கான சமயப் பணிகளிலே இன்றியமையாதது பெண்களின் இல்லமாகும். காலத்தின் கோலத்தாலும் இயற்கையின் சீற்றத்தாலும் உறவுகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோரையும் பிரிந்த பெண்குழந்தைகள் வாழ்வுக்கு வழிகாட்டத் துர்க்காபுரம் மகளிர் இல்லத்தை அமைத்துத் திறம்பட நடத்தினார். அவர் அக்குழந்தைகளின் அன்னையாக இருந்து வாழந்த வாழ்வு மனித விழுமியப் பண்பாட்டின் ஓர் அடையாளமாக உள்ளது.

எதிர்காலத்திலும், தான் செய்த சைவப்பணி சிறப்பாகத் தொடர வேண்டும் என எண்ணிச் செயற்பட்டவர். இன்று துர்க்காபுரம் தருமபரிபாலன சபைத்தலைவராக இருந்து அறப்பணி செய்யும் ஆறு. திருமுருகனை உருவாக்கியவர் சிவத்தமிழ்ச் செல்வியே. 14 ஆண்டுகள் அவரிடம் சைவப் பணியாற்றும் பயிற்சியைப் பெற்ற ஆறு. திருமுருகன் அவர் வழிநின்று அரிய பணி செய்கிறார். எல்லா நாடுகளுக்கும் சிவத்தமிழ்ச் செல்வியைப் போல சென்று சமயப் சொற்பொழிவு செய்து அறப்பணிகளுக்கான பொருளீட்டி வருகிறார். அவர் இல்லறம் துறந்த நம்பியாக இருப்பதும் இதற்கு வாய்ப்பாக உள்ளது. சைவசமய வரலாற்றில் பெரிய புராணம் காரைக்காலம்மையரையும் திலகவதியாரையும் பதிவு செய்து வைத்துள்ளது. எங்கள் அன்னை சிவத்தமிழ்ச்செல்வியின் சைவ வாழ்வியல் வரலாறு விரிவாக எழுதப்பட்டு நூலாக வெளிவர வேண்டும்.

நாம் அவர் காலத்திலே அவரோடு வாழ்ந்து பெருமை பெற்றோம். எமது தலைமுறையினர் அவர் வரலாற்றைப் படித்து அவரது நீங்கா நினைவுகளோடு சைவவாழ்வியல் வாழ வேண்டும் இது காலத்தின் குரலாகும்.

**முனைவர் மனோன்மணி சன்முகதாஸ்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி விவேகானந்தர் பொன்மொழிகள்

- கடவுள் இருந்தால் அவனை நாம் காணவேண்டும், ஆத்மா இருந்தால் அதனை நாம் உணர வேண்டும், அப்படியில்லை யென்றால் நம்பிக்கை இல்லாமல் இருப்பது நன்று. பாசாங்கு போடுவதை விட நாத்திகனாக இருப்பதே மேல்.

- உலகின் குறைகளை பற்றி பேசாதே. குறைகளை நோக்கி வருத்தப்படு, எங்கும் நீ குறைகளை காண்பாய். ஆனால், நீ உலகுக்கு உதவி செய்ய விருப்பினால் உலகை தூற்றாதே, குறை சொல்லாதே. குறை சொல்லி உலகை இன்னும் பலவீனப்படுத்தாதே. உலகின் குறைகள், குற்றங்கள் எல்லாம் அதன் பலவீனத்தால் விளைபவை அல்லவா.

- செயல் நன்று, சிந்தித்து செயலாற்றுவதே நன்று. உனது மனதை உயர்ந்த இலட்சியங்களாலும், சிந்தனைகளாலும் நிரப்பு. அவற்றை ஒவ்வொரு நாளின் பகலிலும் இரவிலும் உன் முன் நிறுத்து. அதிலிருந்து நற்செயல்கள் விளையும்.

- வாழ்வும் சாவும், நன்மையும் தீமையும், அறிவும் அறியாமை யும் ஆகியவற்றின் கலவைதான் மாயை, அல்லது பிரபஞ்சத்தின் இயல்பு. இவ் மாய்த்துள் நீ எல்லையற்று மகிழ்ச்சிக்காக அலையலாம், ஆனால் நீ தீமையையும் காண்பாய். தீமையின்றி நன்மை இருக்குமென்பது சிறுபிள்ளைதனம்.

- இளைஞர்களே, உங்களுக்கு என்னிடம் நம்பிக்கை இருக்கு மானால், என்னை நம்புவதற்குரிய தைரியம் இருக்குமானால், ஒளிமயமான எதிர்காலம் உங்களுக்குக் காத்திருக்கிறது என்பேன்.

- பலவீனம் இடையறாத சித்திரவதையாகவும் துன்பமாகவும் அமைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒ பிறரது பாராட்டுக்கும் பழிக்கும் செவிசாய்த்தால் மகத்தான காரியம் எதையும் செய்ய முடியாது.

ஒ அடிமைகள் எல்லோருக்கும் பெரிய சனியனாக இருப்பது பொறாமையே ஆகும். நமது நாட்டைப் பிடித்த சனியனும் அதுதான்.

ஒ ஏழை எளியவர்கள், ஒதுக்கப்பட்டவர்கள், கல்வியறிவில்லாத வர்கள் ஆகிய இவர்களே உன்னுடைய தெய்வங்களாக விளங்கட்டும்.

ஒ பகை, பொறாமை ஆகியவற்றை நீ வெளியிட்டால், அவை வட்டியும் முதலுமாக மீண்டும் உன்னிடமே திரும்பி வந்து சேர்ந்துவிடும்.

ஒ உண்மைக்காக எதையும் துறக்கலாம் ஆனால் எதற்காகவும் உண்மையைத் துறக்காதே.

ஒ வலிமையே மகிழ்ச்சிகரமான, நிரந்தரமான, வளமான, அமரத்துவமான வாழ்க்கை ஆகும்.

ஒ தன்னலம் சிறிதும் இல்லாமல், நிறைந்த அன்புடன் பழகு பவர்களே இப்போது உலகத்திற்குத் தேவைப்படுகிறார்கள்.

ஒ இரக்கம் உள்ள இதயம், சிந்தனை ஆற்றல் படைத்த மூளை, வேலை செய்யக்கூடிய கைகள் ஆகிய இந்த மூன்றும் நமக்குத் தேவை.

ஒ வீரர்களே, கனவுகளிலிருந்து விழித்தெழுங்கள்! தளைகளி லிருந்து விடுபடுங்கள்!

ஒ இளைஞனே, வலிமை, அளவற்ற வலிமை – இதுவே இப்போது தேவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சிறந்த இலட்சியத்துடன் முறையான வழியைப் பின்பற்றித் தைரியத்துடன் வீரனாக விளங்கு!

- உடல் பலவீனத்தையோ, மன பலவீனத்தையோ உண்டாக்கும் எதையும் அணுகக் கூடாது.

- நமது சமுதாயம் இப்போது இருக்கும் தாழ்ந்த நிலைமைக்கு மதம் காரணம் அல்ல. மதத்தை முறையாகப் பின்பற்றாமல் போனதுதான் சமுதாயத்தின் வீழ்ச்சிக்குக் காரணம் என்று நான் சொல்கிறேன்.

- எவனுடைய இதயம் ஏழைகளுக்காக இரத்தம் வடிக்கிறதோ அவனையே நான் மகாத்மா என்பேன் மற்றவர்கள் துராத் மாக்களே.

- எப்போதும் பொறாமையை விலக்குங்கள். இதுவரையிலும் நீங்கள் செய்யாத மகத்தான காரியங்களை எல்லாம் செய்து முடிப்பீர்கள்.

- கீழ்த்தரமான தந்திரங்களினால் இந்த உலகில் மகத்தான காரியம் எதையும் சாதித்துவிட முடியாது.இது என் உறுதியான நம்பிக்கை.

- சோம்பேறித்தனத்தை எந்த வழியிலும் துரத்தியாக வேண்டும். சுறுசுறுப்பு என்பதற்கு எதிர்ப்பது என்பது பொருள்.

- நமது நாடு வீரர்களை வேண்டி நிற்கிறது. வீரர்களாகத் திகழுங்கள்! தன்னம்பிக்கை கொண்டிருந்த ஒரு சிலருடைய வரலாறே உலக சரித்திரம் ஆகும்.

- அளவற்ற பலமும் பெண்ணைப் போல் இரக்கமுள்ள இதயமும் பெற்றவனே உண்மை வீரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இளைஞர்களே, தேச முன்னேற்றம் என்னும் தேர்ச் சக்கரத்தைக் கிளப்புவதற்கு உங்கள் தோள்களைக் கொடுங்கள்.

- ஓ சிங்கங்களே! நீங்கள் செம்மறியாடுகள் என்ற மயக்கத்தை உதறித் தள்ளுங்கள். சுயநலம் என்பதை அறவே தூர எறிந்துவிட்டு வேலை செய்யுங்கள்..

- உன்னை நீயே பலவீனன் என்று நினைத்துக் கொள்வது மிகப் பெரிய பாவம்.

- என் குழந்தைகளான நீங்கள் என்னைவிட நூறு மடங்கு சிறந்தவர்களாக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

- தீண்டாமையை தீவிர கொள்கையாகவும் உணவு உண்பதையே தெய்வமாக கருதும் வரை நீங்கள் ஆன்மிகத்தில் முன்னேற முடியாது.

- பெரிய புத்தகங்களை படிப்பதாலும் அவ்வாறு படித்து பேரறிஞர் ஆவதாலும் ஆன்மிக உணர்வைப் பெற முடியாது என்பது நிச்சயம்.

- சங்கங்கள் ஏற்படுத்தி கூட்டங்கள் சேர்த்து எவரும் ஆன்மீக உணர்வை பெற முடியாது. அன்பின் மூலமாகத் தான் ஒருவரிட மிருந்து மற்றொருவருக்கு ஆன்மிக உணர்வை செலுத்த முடியும். ஆன்ம ஞானத்தைப் பெற விரும்பும் ஒருவன் தொடக்கத்தில் புற உதவிகளைப் பெற்று சுயபலத்தில் நிற்க வேண்டும். ஆன்ம ஞானம் கிட்டிய பின் பிற உதவிகள் தேவையில்லை.

- கல்வி மூலம் தன்னம்பிக்கை ஏற்படுகிறது. தன்னம்பிக்கை மூலம் தன்னுள் உறங்கிக் கிடக்கும் ஆன்மா விழித்துக் கொள்கிறது. கைக்கோ, வாளுக்கோ ஆற்றல் ஏது? ஆற்றல் முழுவதும் ஆன்மாவிலிருந்தே வெளிப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஃ எல்லாப் பெருமையையும், எல்லா ஆற்றலையும், எல்லாத் தூய்மையையும் ஆன்மா தூண்டுகிறதே தவிர, ஆன்மாவைத் தூண்டுவது எதுவும் இல்லை.

ஃ ஆன்மிக உணர்வை பெறாதவரை நமது நாடு மறுமலர்ச்சி அடையாது. ஆன்மிக வாழ்க்கையில் பேரின்பம் பெறாமல் போனால், புலனின்ப வாழ்க்கையில் திருப்தியடைய முடியாது. அமுதம் கிடைக்காமல் போனால் அதற்காகச் சாக்கடை நீரை நாடிச் செல்லமுடியாது.

ஃ ஆயிரம் ஆண்டுகள் கங்கையில் நீராடிய போதிலும் சரி, அல்லது ஆயிரம் ஆண்டுகள் காய்கறி உணவையே உண்டு வந்தாலும் சரி, உன்னுள்ளே இருக்கும் ஆன்மீகம் விழிப்படையாவிட்டால், அதனால் ஒரு பயனும் இல்லை.

ஃ ஒரு நாட்டின் முன்னேற்றத்தை அளப்பதற்குரிய மிகச் சிறந்த கருவி, அந்த நாடு பெண்களை எப்படி மதிக்கிறது என்பதை அறிவதாகும். எங்கு பெண்கள் மதிக்கப்படுகிறார்களோ, அங்கே தேவதைகள் மகிழ்ச்சி அடைகின்றனர். எங்கே அவர்கள் மதிக்கப்படவில்லையோ, அங்கே எல்லா காரியங்களும் முயற்சிகளும் நாசமடைகின்றன. எந்த நாட்டில், எந்த குடும்பத்தில் பெண்களுக்கு மதிப்பு இல்லையோ, எங்கே அவர்கள் துயரத்தோடு வாழ்கிறார்களோ அந்த நாடும் குடும்பமும் உயர்வடைவதற்கான நம்பிக்கையே இல்லை!

ஃ தோல்விகளைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். இலட்சியத்திலிருந்து 1000 தடவை வழுக்கி விழுந்தாலும், இலட்சியத்துக்கு உழைப்பதில் பிழைகள் நேர்ந்தாலும் திரும்பத் திரும்ப அந்த லட்சியத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள். இலட்சியத்தை அடைய 1000 தடவை முயலுங்கள். அந்த 1000 தடவை தவறினாலும் இன்னுமொரு முறை முயலுங்கள். முயற்சியைக் கைவிடாதீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஃ எல்லாவற்றிலும் பரம் பொருளைப் பார்ப்பதுதான் மனிதனின் இலட்சியமாகும். எல்லாவற்றிலும் பார்க்க முடியாவிட்டாலும் நாம் நேசிக்கும் ஒரு பொருளிலாவது பார்க்க வேண்டும். பிறகு இன்னொன்றில் பார்க்க வேண்டும். இப்படியே இந்தக் கருத்தை விரிவுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஃ எல்லாவற்றையும் கடவுளாகப் பார்ப்பதற்கு எவ்வளவு காலம் வேண்டுமானாலும் நாம் எடுத்துக் கொள்ளலாம். ஆனால் ஒரு சமயத்தில் நிச்சயம் அந்த லட்சியத்தை அடைந்துவிடுவோம்.

ஃ தீமையை எதிர்க்காதீர்கள், அகிம்சையே மிக உயர்ந்த ஒழுக்க இலட்சியம் என்று ஆச்சாரியார்கள் உபதேசித்து இருக்கிறார்கள். இந்த உபதேசத்தை நம்மில் சிலர் அப்படியே கடைப்பிடிக்க முயல் வோமானால் சமுதாய அமைப்பே இடிந்து தூள் தூளாகி விடும்.

ஃ அயோக்கியர்கள் நம் சொத்துக்களையும் நம் வாழ்க்கையை யும் பறித்துக் கொண்டு தங்கள் விருப்பப்படி நம்மை ஆட்டி வைப்பார்கள். இது நமக்குத் தெரியும். இத்தகைய அகிம்சை சமுதாயத்தில் ஒரேயொரு நாள் கடைப்பிடிக்கப்பட்டாலும் கூட பெரும் நாசமே விளைவாக இருக்கும்.

ஃ ஆனாலும் தீமையை எதிர்க்காதீர்கள் என்ற உபதேசத்தின் உண்மையை உள்ளுணர்வின் மூலமாக நம் இதய ஆழங் களில் உணரவே செய்கிறோம். இது மிக உயர்ந்த இலட்சியமாக நமக்குத் தோன்றுகிறது. என்றாலும் இந்தக் கோட்பாட்டை உபதேசிப்பது என்பது மனித குலத்தின் பெரும் பகுதியை நிந்திப்பதற்கே சமமாகும்.

ஃ அதுமட்டுமல்ல, தாங்கள் எப்போதும் தவறையே செய்கிறோம் என்ற எண்ணத்தை அது மனிதர்களிடம் உண்டாக்கிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் எந்த வேலையைச் செய்தாலும் அவர்களின் மனசாட்சியில் சந்தேகங்கள் எழுந்த வண்ணமே இருக்கும். இது அவர்களை பலவீனப்படுத்துகிறது.

- இவ்வாறு தொடர்ந்து தங்களை மறுப்பது, மற்ற பலவீனங்கள் உண்டாக்கும் தீமையை விட அதிக தீமையைத் தரும். எந்த மனிதன் தன்னைத்தானே வெறுக்கத் தொடங்கி விட்டானோ, அவனுக்கு அழிவின் வாசல் எப்போதோ திறந்துவிட்டது. இது ஒரு நாட்டிற்கும் பொருந்தும். நமது முதற் கடமை நம்மை நாம் வெறுக்காமல் இருப்பதுதான். ஏனென்றால் நாம் முன்னேற வேண்டுமென்றால் முதலில் நமக்கு நம்மிடம் நம்பிக்கை வேண்டும். பிறகு கடவுளிடம் நம்பிக்கை வேண்டும்.

- தன்னிடம் நம்பிக்கை இல்லாதவன், கடவுளிடமும் ஒரு போதும் நம்பிக்கை வைக்க முடியாது.

- நீ எதை நினைக்கிறாயோ அதுவாக ஆகிறாய் (அதற்காக சிங்கமாக ஆகவேண்டும் என் நினைத்தால் அது முடியாது). உன்னை வலிமை உடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவன் ஆவாய்! (ஆனால் முயற்சி தேவை).

- ”உன்னால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒருபோதும் நினைக்காதே!” “‘நான் எதையும் சாதிக்க வல்லவன்’ என்று சொல். நீ உறுதியுடன் இருந்தால் பாம்பின் விஷம்கூட சக்தியற்றது ஆகிவிடும்.

- பலமே வாழ்வு பலவீனமே மரணம்!

- கீழ்ப்படியக் கற்றுக்கொள். கட்டளையிடும் பதவி தானாக உன்னை வந்து அடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ உற்சாகமாக இருக்கத் தொடங்குவதுதான் வெற்றிகரமான வாழ்க்கை வாழத் தொடங்குவதற்கான முதல் அறிகுறி.

ஆ அடிமைகளின் குணமாகிய பொறாமையை முதலில் அழித்துவிடு.

ஆ மிருக பலத்தால் அல்லாமல் ஆன்மிக பலத்தால் மட்டுமே எழுச்சி பெறமுடியும்.

ஆ சுயநலமின்மை, சுயநலம் என்பவற்றைத் தவிர, கடவுளுக்கும் சாத்தானுக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை.

ஆ நீ செய்த தவறுகளை வாழ்த்து. அவைகள், நீ அறியாமலே உனக்கு வழிகாட்டும் தெய்வங்களாக இருந்திருக்கின்றன.

ஆ அன்பின் மூலம் செய்யப்படும் ஒவ்வொரு செயலும் ஆனந்தத்தைக் கொண்டுவந்து தந்தே தீரும்.

ஆ உங்களால் யாருக்கும் உதவி செய்ய முடியாது. மாறாகச் சேவைதான் செய்ய முடியும்.

ஆ உனக்குத் தேவையான எல்லா வலிமையும், உதவியும் உனக்குள்ளேயே உள்ளன.

ஆ எந்த குடும்பத்தில் உள்ள பெண்மை கொண்டாடப் படவில்லையோ, அந்த வீடும் பாழ் அந்த நாடும் பாழ்.

ஆ நமக்குப் பல அனுபவங்களை பெற்றுத்தர இந்த உலகம் படைக்கப்பட்டது. இங்கிருக்கும் ஒவ்வொரு பொருளும் நம்மால் அனுபவிக்கப் பட வேண்டியது என்பதில் சந்தேகமில்லை. அதற்காக அது வேண்டும், இது வேண்டும் என யாரிடமும் கேட்காதே. வேண்டுதல் ஒரு பலவீனமாகும். இந்த வேண்டுதல்தான் நம்மை பிச்சைக்காரர்களாக்குகிறது. நாம் அனைவரும் ராஜகுமாரர்கள். பிச்சைக்காரர்கள் அல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஃ இயற்கை என்றும், விதி என்றும் எதுவும் கிடையாது.கடவுள் என்ன நினைக்கிறாரோ அதுவே நடக்கும்.

ஃ கோபத்தில் ஒருவரை ஒரு அடி அடித்துவிடுவது எளிது. ஆனால் எழும் கையை தாழ்த்தி மனதைக் கட்டுப்படுத்தி அமைதியாய் இருப்பது கடினமான செயல். இந்த கடினமான செயலைத்தான் நீ பழகிக்கொள்ள வேண்டும்.

ஃ ஏதாவது தவறு செய்துவிட்டால், "ஐயோ! நான் தீயவன் ஆகிவிட்டேனே!" என்று வருத்தப்பட வேண்டாம். நீ நல்லவன்தான். ஆனால், இன்னும் உன்னை நல்லவனாக்க முயற்சி செய்ய வேண்டும்.

ஃ உலக மக்கள் இன்று கடவுளை கைகழுவி வருகிறார்கள். காரணம் கேட்டால், "கடவுள் எங்களுக்கு என்ன செய்தார்? அவரால் எங்களுக்கு என்ன பயன்?' என்று கேட்கிறார்கள். நீங்கள் கேட்பதை எல்லாம் செய்வதற்கு கடவுள் ஒன்றும் நகரசபை அதிகாரி அல்ல.

ஃ மனிதனை உருவாக்குவதில் இன்பமும் துன்பமும் சமபங்கு வகிக்கின்றன. சில நேரங்களில் இன்பத்தை விட துன்பமே மனிதனுக்கு சிறந்த ஆசானாக அமைகிறது. நன்மையைப் போல் தீமையில் இருந்தும் மனிதன் பாடம் கற்றுக்கொள்கிறான்.

ஃ உலக இன்பம் மனிதவாழ்வின் இலட்சியமாக இருக்கக்கூடாது. ஞான இன்பம் அடைவதையே வாழ்வின் லட்சியமாகக் கொண்டிருக்க வேண்டும். ஞானம் என்பது ஆண்டவனை உணர்வதும், சக மனிதர்களை ஆண்டவனாய் காண்பதுமாகும்.

ஃ உதவி செய், சண்டை போடாதே, ஒன்றுபடுத்து, அழிக்காதே, சமரசமாய் இரு, சாந்தம் கொள், வேறுபாடு காட்டாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ଣ உலகம் எவ்வளவு பெரிதோ அவ்வளவு பெரிதாக உங்கள் இதயத்தை விரிவாக்குங்கள். தன்னைச் சரிப்படுத்திக் கொள்பவனே உலகைச் சரிப்படுத்த தகுதியானவன்.

ଣ பலவீனமாக இருக்கிறோமோ என வருத்தப்படாதீர்கள். பயந்து கொண்டே வாழ்வதில் எந்த அர்த்தமும் இல்லை. பயத்திற்கு ஒரே பரிகாரம் வலிமையைக் குறித்து சிந்திப்பது தான். அளவற்ற தன்னம்பிக்கை பயத்தை விரட்டிவிடும். பயங்கரமான வேகத்துடன் செயல்புரிவதன் மூலமே வெற்றி இலக்கை விரைவில் அடைய முடியும்.

ଣ சுடுகாட்டுக்கு அப்பாலும் நம்மைத் தொடர்ந்து வருகிற ஒரே நண்பன் நல்லொழுக்கமே. மற்றவை யாவும் மரணத்துடன் முடிந்துவிடும்.

ଣ **தியானம்**

எல்லாவற்றையும் தவிர்க்கும் சக்தியைக் கொடுப்பதுதான் தியானம். "பார் அங்கே..அதோ ஒரு அழகான பொருள்" என இயற்கை கூறுகிறது. "கண்களே பார்க்காதீர்கள்!" என்று நான் கண்களுக்கு உத்தரவிடுகிறேன். கண்கள் பார்ப்பதில்லை. "இதோ நல்ல நறுமணம், இதை முகர்ந்து பார்" என இயற்கை கூறுகிறது. "அதை முகராதே!" என நான் என் மூக்கிற்கு உத்தரவிடுகிறேன். மூக்கு அதை முகர்வதில்லை. இயற்கை ஒரு கொடிய காரியம் செய்கிறது. என் குழந்தைகளில் ஒன்றைக் கொல்கிறது. "இப்போது என்ன செய்வாய்? மடையா உட்கார்ந்து அழு. துக்கத்தின் ஆழத்திற்குப்போ!" என்று இயற்கை சொல்கிறது. ஆனால் நான் சொல்கிறேன், "நான் போக வேண்டிய அவசியம் இல்லை!" என்று குதித்து எழுந்து சுதந்திரமாக இருக்கவேண்டும். இதைப் பயிற்சி செய்து பாருங்கள். ஒரு நொடியில் தியானத்தில் இந்த இயற்கையை நீங்கள் மாற்ற முடியும். இந்த சக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்குக் கிடைத்தால் அதுவே பரலோகமாகாதா? சுதந்திரமாகாதா? தியானத்தின் சக்தி அதுதான்!

### ஞானதீபம்

ஓ மனிதா! இதை நம்பு. உள்ளத்தில் இதை ஊன்றச் செய். மாண்டவர் மீள்வதில்லை. கழிந்த இரவு வருவதில்லை. வீழ்ந்த அலை எழுவதில்லை. ஒரு முறை பெற்ற உடலை மீண்டும் மனிதன் பெறுவதில்லை. எனவே, ஓ மனிதா இறந்து போன பழங்கதையை வணங்காதே! வா இங்கு வாழும் நிகழ்காலத்தை வணங்கு. சென்றதை நினைத்துப் புலம்பாதே. இன்று உள்ளதைக் கண்டு அதில் பங்கு கொள். அழிந்து போன கரடு முரடான பாதையில் சென்று உனது சக்தியை வீணாக்காதே. உன்னருகே உள்ள புதிய செப்பனிடப்பட்ட நன்கு வகுக்கப்பட்ட இராஜபாதையில் செல். வா! உன்னை அழைக்கிறோம். அன்புள்ளவன் இதை அறிந்து கொள்வான்!

### மனதை அடக்கு

எல்லா பேய்களும் நம்முடைய மனத்திலேதான் இருக்கின்றன. மனம் கட்டுப்பட்டு அடங்கி இருந்தால் எந்த இடத்தில் நாம் இருந்தாலும் எங்கிருந்தாலும் அது சொர்க்கமாக மாறிவிடும். மூடப்பட்டுள்ள கதவை எப்படி தட்ட வேண்டும், எப்படி தேவையானபடி தாக்கவேண்டும் என்பது மட்டும் நமக்கு தெரிந்து இருந்தால் உலகம் தனது ரகசியங்களை வெளியிடத் தயாராக இருக்கிறது. அத்தகைய வலிமையும் தாக்கும் வேகமும் எல்லோருக்கும் கிடைத்து விடாது. மனதை ஒருமுகப் படுத்துபவனுக்கே இந்த வலிமை கிட்டும். மனித உள்ளத்தின் ஆற்றலுக்கு எல்லையே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்

எமது குடும்பத்தின் குலவிளக்கு

**திவ்யா சுதாகரன்**

அவர்கள் இறையடி எய்திய செய்தியைக் கேட்டு ஓடோடி வந்து ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரிற்கும், தொலைபேசி, மின் அஞ்சல், பதிரிகை மற்றும் துண்டுப் பிரசுரம் மூலம் இரங்கல் தெரிவித்தோரிற்கும், அன்னாரின் இறுதிக் கிரியைகளில் பங்கெடுத்தவர்களுக்கும், வைத்திய சாலையில் இருந்தபோது உதவி புரிந்த அனைத்து உறவினர், நண்பர்களுக்கும் அன்னாரது நினைவு தினத்திலே அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்த அனைவரிற்கும் இந் நினைவு மலரை விரைவாகப் பதிப்பிட உதவிய பதிப்பகத்தாரிற்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**- குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Our Sincere Thanks

*We the family of the*

**LATE MRS.THIVYA SUTHAHARAN**

*wish to express our sincere gratitude to the relatives and friends who attended the funeral service, helped the funeral arrangement, sent floral tribute and messages of condolence, provided us meals and supported us in numerous ways in sharing the family's grief during our time of loss.*

*A special word of thanks to the relatives and friends for the unconditional and timely support offered around the clock after the surgery*

*Our sincere thanks to the relatives and friends who are with us here for the memorial service.*

***Family Members***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவளி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்? எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு?

எதை நீ படைத்திருந்தாய், அது வீணாகுவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.

" இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும் "

- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -

OSAI Digital
for all your designing & printing needs

473,1/1A, Galle Road, Colombo 00600 | +94 77 5433356 | osaidigital@gmail.com | www.osaidigital.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org